# ஆத்ம ஜோதி.



R. S. சுப்பிரமணியம்.

## பொருளடக்கம்.


| | | |
|---|---|---|
| பிள்ளையார் தோத்திரம் | R. S. சுப்பிரமணியம் | — 289 |
| பக்தித்தொடர்வை | ,, | — 290 |
| நல்லுரை | ஆசிரியர் | — 291 |
| அன்புசெய் ...அழைக்கின்றேம் | தமிழ்வேள் | — 295 |
| வியாசபூசனை | சுத்தானந்தர் | — 297 |
| ஸ்ரீமலர்ச்சரித்திரம் | பக்தி | — 299 |
| தொண்டர்களே... | ஸ்ரீமதி சோமசுந்தரம் | — 301 |
| கதிர்காமனைப்பாடுவோம் | ஸ்ரீ ருக்மிணி | — 305 |
| அன்னைத்தெய்வம் | வ. ரு. பிள்ளை | — 306 |
| ஆத்மசிந்தனை | ம. சி. சிதம்பரப்பிள்ளை | — 308 |
| ஆத்ம சாதனைகள் | சுந்தரம்மாள் | — 311 |
| பெண்களும்-உடைமையும் | பாக்கியம் | — 313 |
| கடவுள் அன்பு | சிவலிங்கையர் | — 316 |
| செய்திக்கொட்டு | — | — 319 |





# ஆத்ம ஜோதி.

ஆத்மீக மாதவெளியீடு

க. இராமச்சந்திரன். [கௌரவ ஆசிரியர்]

நா. முத்தையா. [பதிப்பாசிரியர்

சந்தாவிபரம்:

ஆயுள்சந்தா ரூ. 75/- வருடச்சந்தா ரூ. 3/-

தனிப்பிரதி சதம் -/30

"ஆத்மஜோதி" நிலையம், நாவலப்பிட்டி

(இலங்கை.)

ஓம்.

# ஆத்ம ஜோதி.

"எல்லா உலகிற்கும் இறைவன் ஒருவன்
எல்லா உடலும் இறைவன் ஆலயமே"—சுத்தானந்தர்.

சோதி 2. விகிர்தி௵ ஆவணி௴. சுடர் 10.

## மன்னார், உப்புக்குளம் பிள்ளையார் தோத்திரம்.

ஓமா மெனவெங்கு மோங்கிடவே நாதத்திற்
றூமா யுதித்தநந் தந்திமுகா—வாவாவா
மன்னாரின் மாவொலிபோய் மங்களமாம் வாழ்வுறவே
பின்னாத மாமணிகண் டாம்.

ⵙ ⵙ ⵙ ⵙ

மாமணியி னோசையிலே மந்திரமும் வாக்குமெழும்
நாமணியி னல்லருளுநந் தாமணியும்—வாமணியே
பத்தி யினாலிங்கு பாவிப்பார் மாசகற்று
சித்தி விநாயகனைச் சேர்ந்து.

ⵙ ⵙ ⵙ ⵙ

மண்ணவர்க ளேத்தொலியும் வானவர்கள் வாழ்த்தொலியும்
பண்ணவர்கள் பாடும் பாவொலியும்—கண்ணே
படியிற் பெறுமன்னார் பார்திகழ வேதிலோன்
அடியார்க் குமடிய னாய்.

—R. S சுப்பிரமணியம்.

[1912-ம் ஆண்டு டிசம்பர் மாசம் 12-ந் தேதி வியாழக்கிழமை மன்னாரில் புதிதாகக் கட்டப்பெற்ற பிள்ளையார் கோயிலில் அசையா மணி ஓசை ஆரம்பமானபோது இயற்றப்பட்ட பாடல்கள்.]

# பற்றித் தொடர்வன இருவினைப் புண்ணிய பாவமுமே.

(R..S. சுப்பிரமணியம்)

நிலையில்லாத வாழ்க்கையிலே, நிலையில்லாத உடம்பைக்கொண்டு, நிலையில்லாத பொருளைத்தேடி, நிலையில்லாத இன்பத்துக்காக நாளும் நாளும் பாடுபட்டுவரும் மயக்கத்தில் நாமிருக்க, யமனென்னுங் காவலன் நமக்குத் தோற்றுமல் பின் நின்று கள்வனைப்போல எங்களுயிரை அபகரித்துவிடுகிறுன். மரணம் வந்தவுடனே நாம் ஆயத்தமாயிராதபடியால் திடுக்கிட்டுப் பயந்து வாய் குழறிப் பதைக்கின்ருேம். மரணஞ் சம்பவிக்கும் பொழுது நாம் முன் பாடுபட்டுத் தேடிய பொருளும், சுற்றமும், மனையும், போக போக்கியங்களும், நம்மோடு கூட வரஇயலாமல் இருக்கின்றன. நாம் தேடிய பொருள்கள் முதலியன உடலோடு இங்கே கிடக்க 'பற்றித் தொடர்வன இருவினைப் புண்ணிய பாவமுமே' என்றபடி, உயிரோடு நாம் செய்த புண்ணிய பாவமிரண்டுமே பின்பற்றித் தொடர்கின்றன.

எனவே, தேடவேண்டிய பொருள், உயிருக்கு நற்றுணையாகச் செல்லக்கூடிய புண்ணியமும், ஞானமும், தவிர்க்கவேண்டிய பொருள் உயிரை நரகத்திலே விழுத்தித் துன்பத்தைச் செய்கின்ற பாவமுமேயாம். நன்மை தீமை என்பனவற்றைப் பகுத்தறிந்து, தமது மனம், புத்தி, சித்தம் ஆகிய கருவிகளெல்லாம் சுகத்தைக் கொடுக்கின்ற நல்வினையையே அவாவி நிற்கச்செய்து, வினைகளுக்குத் தக்க சுகதுக்கபலன்களைக் கொடுக்கும் பரமபிதாவாகிய நடராசப்பெருமானது குஞ்சித பாதமே துணையென நாடி நிற்கவேண்டியதே அறிவுடையோர் கடனுகும்.

[மன்னுரில் தமது பிரிய பத்தினியர் தேகவியோகம் அடைந்த இனத்தன்று, அன்னுரின் அபரக்கிரியைகள் முடிந்ததும், திரு சுப்பிரமணியம் அவர்கள் செய்த உபந்நியாசத்திலிருந்தெடுக்கப்பட்டது. அப்பிரசங்கம் முழுவதும் பின்னர் 'ஆத்மஜோதி'யில் இடம்பெறும்]-

# நல்ல முடிவு.

(ஆசிரியர்)

திருக்கேதீச்சரத் திருப்பணி வேலையை இப்பொழுதுள்ள ஆலயம் அமைந்திருக்கும் இடத்திலேயே ஆரம்பிப்பதா அல்லது ஓர் புது ஆலயத்தை வேறிடத்தில் அமைப்பதா என்ற பிரச்சனை சென்ற இரு வருஷங்களாகச் சைவமக்களின் கவனத்தில் இருந்து வந்ததென்பது எல்லாரும் நன்கறிந்த விஷயமாகும். இதைக்குறித்து சிவத்திரு ஈசான சிவாச்சாரிய சுவாமிகள் அளித்த அபிப்பிராயம் 'ஆத்மஜோதி'யின் சித்திரைமாசச் சுடரில் வெளிவந்துள்ளது. அதனைப் பேணியும் வேறுபல அபிமானிகளின் ஆலோசனையைத் தழுவியும், திருக்கேதீச்சர ஆலயத் திருப்பணிச் சபையின் பொது நிர்வாகக் குழுவினர் ஏகமனதாய் கீழ்க்கண்ட தீர்மானங்களை நிறைவேற்றியுள்ளனர்:—

"(1) திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்சபையினை அமைத்தவர்களை ஊக்கியது திருக்கேதீச்சரப் பெருமானதும்கௌரிஅம்மையாரதும் திருவருளேயாகும்; அப்பெருமானதும் அம்மையாரதும் பரிசுத்தத்தன்மையினை மக்களுணரும்படியாக இத்தனை வருடகாலமாகப் பெருக்கி வந்தது இப்போதுள்ள ஆலயமே. ஆதலால் அதன் தெய்வீக சக்தியினைப் பாதுகாப்பது இச்சபையின் கடமையாகும்.

(2) சபையாரின் வேண்டுகோளுக்கிணங்கி, ஸ்ரீ ஈசான சிவாசாரிய சுவாமிகள் ஆலய அமைப்பைப்பற்றித் தம் அபிப்பிராயத்தைச் சபைக்குத் தெரிவித்துள்ளார். அந்த அபிப்பிராயப்படி இப்போதுள்ள இடமே ஆலய அமைப்புக்குச் சிறந்ததாகும்."

இது மகிழ்ச்சிக்குரிய நல்ல முடிவாகும். இத்தீர்மானங்களின்படி திருப்பணி வேலையைச் சீக்கிரத்தில் ஆரம்பிப்பதற்குவேண்டிய ஒழுங்குகள் செய்யப்படுகின்றனவெனவும் அறிந்து சந்தோஷப்படுகின்றோம். இன்றுவரைக்கும் பேச்சளவிலிருந்த இப்பெரிய விஷயம் செயலுக்குவரத் தொடங்கவே, சுயநலமும், புகழ்விருப்பும், மனவேற்றுமையும் சிறிது சிறிதாகத் தலைகாட்டலாம். தன் கோழி கூவித்தான் பொழுது விடிகிறதென்று அறியாமை

யால் இறுமாப்புற்ற கிழவியின் மனப்பான்மைகூட சிலரிடத்தில் தோன்றவுங்கூடும். திருக்கேதீச்சர ஆலயத்திருப்பணிச்சபைஆரம் பித்தபின் திருக்கேதீச்சரம் இருக்கும் இடத்தை அறிந்தவர்களி டத்தும், ஈழத்துச் சிவனடியார் கூட்டம் நிறுவப்பட்டபின் அப் பெருமானைத் தரிசிக்கச் சென்றவர்களிடத்திலும் இவ்வித உள்ள க்கிடக்கை உதிக்கலாமெனக் கருதிப்போலும், திருஞானசம்பந் தப்பெருமான் தமது பதிகத்தின் ஒன்பதாவது பாட்டில் மிகவும் பொருத்தமான கருத்தமைந்த கேள்வி போட்டுள்ளார்!

ஏழு மாசங்கட்குமுன் யாம் இதேபக்கங்களில் பரிந்துகேட் டுக்கொண்டதுபோல், இப்பரம தொண்டில் ஈடுபடும் மக்கள் சகல ரும் தங்களைக் கௌரியம்மையின் கருவிகளாகக்கருதி, அவள் ப ணிக்குத் தம்மை ஆட்கொண்ட பேரருளின் திறத்தை எண்ணி எண்ணி உருகி, நன்றிசெலுத்தும் உளத்துடன் பணிசெய்வார்க ளாயின், எவ்வித வேற்றுமைக்கோ மனக்கசப்பிற்கோ இடம் வராது. மன்னார்ப் பிரிவில் சைவந்தழைக்குமாறு தமது உடல் பொருள் ஆவி மூன்றினையும் கேதீச்சரநாதன் திருப்பாதங்களில் அர்ப்பணஞ்செய்த திரு. R. S. சுப்பிரமணியம் அவர்களின் வாழ் க்கை நாம் இங்கு கோரும் லட்சியத்திற்கு ஓர் ஒப்பற்ற எடுத்துக் காட்டாகும். அன்னாரின் உருவப்படமே இம்மாச ஜோதியின் அட்டையை அலங்கரிக்கின்றது. அவரின் வரலாறு பின்னர் வெளிவரும். கொழும்பு விவேகானந்த சபை ஸ்தாபகருள் ஒருவரும், அச்சபையை அரிஷ்டத்திலிருந்து ஏழுவருஷங்களா கக் காப்பாற்றிய தியாக புருஷர்களுள் ஒருவருமான இப்பெரி யார் மன்னாரில் அரசாங்க உத்தியோகத்திலிருந்தபோது, ஐந்து ஆண்டுகளாக அல்லும் பகலும் அரிய சிவத்தொண்டாற்றினர். மன்னாரில் உப்புக்குளமென்னுமிடத்தில் ஆரம்பித்த பிள்ளையார் கோயில் திருப்பணிவேலை பணமின்மையால் தடைப்பட்டதைக் கண்டு மனம் புழுங்கி, 1913-ம் ஆண்டு ஜூலாய் மாசம் 28-ந் திகதி திங்கட்கிழமையன்று அவருடன் அத்திருப்பணியில் ஈடு பட்டிருந்த திருவாளர்கள் முத்துக்குமாரு, சிற்றம்பலம் ஆகிய இருவரையும் அழைத்துக்கொண்டு, ஓர் செல்வம்படைத்த சை வரின் இல்லம் சேர்ந்தனர். இவர்கள் வந்த நோக்கத்தை யூகித் தறிந்த அப்பணக்காரன் வீட்டுள் மறைந்திருந்துகொண்டு வெ ளிச்சென்றிருப்பதாக வேலைக்காரன்மூலம் செய்தி அனுப்பிவிட்

டார். உண்மையையறிந்துகொண்ட திரு சுப்பிரமணிய தேசிகரின் வாக்கிலிருந்து உடனே கீழ்க்கண்ட இருபாடல்கள் வெளிவந்தன:—

“நீயாயென்னையிருந்துவெறும்நிரையக்கடலாம்மன்றிற்
பேயாய்வைத்தாய்பெருமானே!பெயர்த்துமிதுவேகைலாயம்
ஆவாயென்றேதிருப்பணியிலமைத்தாய்பொருளுமங்கில்லைத்
தாயாய்வந்துதந்தாயேல்தழைக்குஞ்சைவந்தழைக்குமே.

பொருளார்மனையிற்புகுவென்றாய்புகுந்தேனங்குகதவந்தான்
மருளால்மூடிக்காப்பிட்டால்மகிபா!பொருளுக்கென்செய்கேன்
அருளொளிதுவுமருளேயோஐயாவென்னையலையாதே
பொருளார்மனையில்நீசென்றுபொன்னைக்கொண்டுவாராயே.”

அன்றிரவே இறைவன் தேசிகரின் கனவில் தோன்றி திருப்பணிக்குப் பொருளுதவப்போகும் அன்பரைக்காட்டி மறைந்தனர், அதின்படி எடுத்துக்கொண்ட முயற்சியும் செவ்வனே சீக்கிரத்தில் நிறைவேறியதாகவும் அறிகின்றோம். இன்று வேண்டப்படுவது அப்பெரியார் காட்டிய விசுவாசமும், பக்தியும், சரணாகதியுமேயாம். இக்கட்டுரையை முடிக்குமுன், நாவலர் பெருமான் எண்பது வருஷங்கட்குமுன், சென்னையில் பெத்துநாயக்கன் பேட்டையில் தொண்டைநாட்டுப்பதி புண்ணிய பரிபாலன சபையின் ஆதரவில் செய்த பிரசங்கத்திலடங்கிய சில அமிர்தவசனங்களைத் தரவிரும்புகின்றோம். அப்பிரசங்கத்தின் இறுதியில் அவர் கூறியவை நமது இன்றைய சமுதாய நிலைக்கும் பொருத்தமான உண்மைகளேயாம். அவை பின்வருமாறு.—

“கிலமாயுள்ள ஸ்தலங்களை ஜீர்ணோத்தாரணஞ் செய்தற்கும் நித்திய பூசை முதலியவை இல்லாத ஸ்தலங்களிலே நித்திய பூசை முதலியவைகளை நடத்துதற்கும் பெரும் பொருள் வேண்டுமாதலாலும், தனித்தாயினும் சிலர் மாத்திரம் கூடியாயினும், இவைகளை முடித்தல் இயலாமையாலும் சைவசமயிகளாகிய நம்மவர்கள் எல்லாரும் ஒற்றுமையுடையவர்களாய் ஒருங்கு கூடல்வேண்டும். அப்படிக் கூடாதவழி, இக்கருத்து சித்திபெறாது. தமிழர்களாகிய நம்மவர்கள் யாதாயினும் ஒருகருமத்தை நடத்துதற்கு ஒருங்கு கூடுதல் அரிது.

ஒரோவழிக் கூடினும் ஐக்கியத்தோடு நிலைபெற்று எடுத்த கருமத்தை நிறைவேற்றல் அரிது. அவர்கள் ஐக்கியமேயின்றிப் பெரும்பான்மையுந் தங்கள் உள்ளத்தில் விளையும் பகைமையையே பாராட்டிக் கலகம் விளைத்து, எடுத்த கருமத்தைக் கைநெகிழவிடுவதே வழக்கம். இதுபற்றியே நம்மவர்கள் லௌகிக நெறி, வைதிகநெறி என்னும் இரண்டினும் மேன்மையடையாது, அன்னிய தேசத்தார்களும் அன்னிய பாஷையாளர்களும், அன்னிய சமயத்தார்களுமாயுள்ளவர்களாலே அவமதிக்கப்பட்டுத் தலைகவிழ்கின்றார்கள்."

"நம்மவர்களெல்லாரும் பொறாமை பகை முதலியவைகளின்றி ஐக்கியமுடையவர்களாய்க் கூடும் பொருட்டும், தங்கள் தங்களால் இயன்றமட்டும் வாக்காலும் காயத்தாலும் பொருளாலும் சகாயஞ்செய்து மேற் சுட்டிப்போந்த உத்தமோத்தம சிவபுண்ணியங்களை விதிப்படி சிரத்தையோடு நிறைவேற்றிப் பெரும் புகழையும் பெரும் புண்ணியத்தையும் அடையும் பொருட்டும் திருவருள் காக்கும்படி, பரம காருண்ணிய சமுத்திரமாகிய சிவபெருமானுடைய திருவடிகளைப் பிரார்த்திக்கின்றோம்."

"ஏரோங்க நான்மறையின் சிரமோங்க
எழும்பொருளின் உரையோங்க உரைப்பவர்தம்
பேரோங்க கெழுமணியுந் திருநீறும்
பெரிதோங்கப் பெற்றிடுமாலிம் மன்னூர்
நீரோங்க நிலனோங்க நெல்கரும்பு
நெடிதோங்க நிறைசெல்வத் தவநிலையின்
சீரோங்கச் சின்மயமாம் சிவமோங்க
சித்திவிநாயக னெனவும் செழித்து நில்லே."

22-8-1912. R. S. சுப்பிரமணியம்.

# அன்புநெறி கொண்டும்மை அழைக்கின்றோம்.

தமிழ்வேள்

3 பேரஞராம் இடும்பைகள் முதலா யாவும்
பிறந்துவிடும் வெம்பிறவி தன்னை நீக்கும்
ஆரமுதாம் இப்பிறவி யரிதிற் பெற்றாம்
அதன்பயனை யறிந்தின்ப வாழ்க்கை காணா
தோறுமைம் பொறிகளையு மோம்பி யெஞ்சி
யுள்ளசில வாணாளு முலந்த பின்னர்
கூருமெரி வந்தெம்மைக் கொள்ளும் போது
கூடுமோ? நாமிங்கு குறித்த வெல்லாம்!

4 தீராத வல்வினையைத் தீர்த்து வைக்கும்
திருக்கேதீச் சரத்தானைத் தெரிசிப் பீரேல்
வாராத இன்பங்கள் வந்து சேரும்
வல்வினையா தவற்கண்ட பனிபோ லாகும்
ஆராதகாதலுடன் அன்பாய் நாளும்
அதன்பெருமை மணங்கமழ வேண்டின் முன்பின்
பாராதே நிதியீந்து சைவப் பண்பு
பண்டைநாள் போலொளிரப் பண்ணு வீரே

5 மண்ணோடு மண்ணான மாதோட் டத்தில்
மறைந்திருக்குங் கற்பகப்பூந் தாரு மீண்டும்
விண்ணோடு விண்ணாகி விளங்கித் தோன்ற
வேணுமெனில் வள்ளல்கள் விரும்பி யுள்ளம்
பொன்னோடு மணிபலவும் நல்கி நாளும்
புந்திகலிந் தருந்தொண்டு புரிதல் வேண்டும்
மண்ணோடு மண்ணாக மடியு நாளில்
மனச்சாந்தி பெற்றின்ப மடைய லாமே.

6 சிங்களச் சகோதரர்கள் தங்கள் பண்டைச்
சிற்பங்கள் கோயில்கள் சிதைதல் கண்டு
அங்கங்கு ஓடியநு ராச தானம்
பொல்லனறு வாவாதி யிடங்க ளென்றும்

பொங்குபுகழ் "நாகதீ வயினு" என்னும்
புத்துணர்ச்சி கொண்டு தொண் டாற்ற வேண்டித்
தங்கணித யாயிரமாக் கொண்டெந் நாளும்
தனித்தொண்டு புரிகுவதை யறியீர் நாமே.

7 செம்பவள வாயுடைய உங்கள் செல்வச்
சேயிழையார் தம்மோடு சேர்ந்து நாடி
எம்பெருமா னெழுந்தருளி யிருக்கு மந்த
இன்பஞ்செய் பாலாவித் தீர்த்த மாடி
ஐம்புலனு மொன்றாக்கிப் பக்தியோடு
ஆலயத்தி னுள்வந்தும் இருகை கூப்பிச்
சம்போ! தெங்கதரா! என்று போற்றிச்
சாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்வீராகில்

8 மண்ணுலகில் பிள்ளைப்பே றிலையே யென்று
மனநொந்து யாத்திரைகள் செய்து நெஞ்சம்
புண்ணாகி நிலைதளர்ந்த போதும் நண்ணிப்
போதுமதி ஆடும் பெம் மானே! யென்று
பண்ணாலே பவன்பெருமை கசிந்து பாடிப்
பணியின் தவ குறைதீரப் பெறுவார் பாரில்
கண்ணாரக் கண்டுள்ளங் களித்தா னன்று
கருதரிய துவட்டாவென் றொருவன் காணீர்!

9 பண்டைநாள் கல்லாலின் பால மர்ந்து
பண்புடனே நால்வருக்கு அருளின் பண்பு
கண்டதிருக் கேதீச்ச ரத்தான் கோயில்
கருதியவன் கடிமலர்த்தாள் காதல் செய்து
தொண்டுகள் நாடோறும் புரியின் வாழ்க்கைத்
துயர்நீக்கி யருள்தேக்கி யாட்கொள் வானெம்
பண்டைவினை யவனருளின் பார்வை யாலே
பாரிலழிந் தின்பநெறி பெறலா கும்மே.

10 ஆதார மெனக்கில்லை யப்பா விங்கு
அலைகடலின் துரும்பென்னக் கலங்கி நாளும்
போதாரு மலர்கொண்டுன் புனிதம் பொங்கும்
பொன்னடிப் போதினை யேத்தி யேத்திக்
கேதாரத் தையாவுன் கருணை வேண்டிக்
கிடந்துழன்று வாடுகின்றே னென்றாற் தன்பொற்
பாதார விந்தமலர் காட்டி யின்பம்
பாலிப்பான் தீவினையும் பறந்து போமே.

 (தொடரும்)

# வியாஸ பகவான்.

——:-:——

[சுத்தானந்தர்]

உலகிற்கு எழுத்தாணியால் மகோபகாரம் செய்தவர் பகவான் வியாசர். அவர் அன்று ஓலையில் எழுதிவைத்த பாரதம், பிரம்ம சூத்திரம் முதலிய அரிய நூல்கள், இன்னும் ஒப்பற்று விளங்கு கின்றன. உலக இதிகாசங்களில் மஹா பாரதத்தை எதுவும் மிஞ்சமுடியாது. ஞான நூல்களில் பிரம்ம சூத்திரத்தை எது வும் மிஞ்சமுடியாது. அங்குமிங்கும் சிதைந்துகிடந்த வேதத்தை யும் உருவாக்கித் தந்தவர் வியாசரே. அவரே நான்கு வேதங்க ளையும் முறைப்படுத்தி, உபநிஷத்துக்களையும் அணிவகுத்தவர். உலகின் அருள் நூலாக விளங்கும் பகவத்கீதையைப் பாடி வை ந்தவரும் வியாசரே. ஆதலால் வியாசரை நமது பாரத சமுதாய குருவாகப் பாவிக்கலாம். வியாசாசாரியருக்கு வணக்கஞ்செலுத் தாத எந்தத் துறவியும் முனிவரும் நமது நாட்டில் இல்லை. பாரத சக்தியும் அந்த மஹானை வணங்கித்தான் பணியைத் தொடங்கு கிறது.

வேத வியாசர், சுமார் 5000 ஆண்டுகளுக்குமுன் வாழ்ந்த வர். அவர் தந்தை பாராசரர் மனுவுக்குப் பிறகு கலியுகத்திற்கேற் றபடி ஸ்மிருதி செய்தார். தற்காலம் சீர்திருத்த வாதிகள் சம மதவயதை உயர்த்தல், மறு மணம் செய்தல் என்றெல்லாம் பேசு கிறார்களே. அவர்களுக்குமேல் இரண்டுபடி அதிகமாகப் பாராச ரர் மனிதருக்குச் சுதந்திர விதிகளைச் செய்திருக்கிறார். வியாசர் தாயார் அத்திரிகை மகளான ஸத்தியவதி பெற்றோர் காதல் மணம் புரிந்து சுதந்தரராக வாழ்ந்தனர். வியாசர் ஒரு தீவில் பிறந்தார். அதனால் அவருக்கு த்வைபாயனர் என்ற பெயர் வந்தது. அவர் நிறம் கறுப்பு; அதனால் கிருஷ்ணத்வைபாயனர் எனப்பட்டார். வியாசர் தகப்பனாரிடமே கல்விகற்று பஞ்சாக்ஷரிஜபத்தைக் கோ டிக்கணக்காகச் செய்து வாக்சித்திபெற்று அருட்கவியானார். அவர் வேதங்களை எல்லாம் சேர்த்து ஆராய்ந்தார். அவற்றைப் பல சாகைகளாகப் பிரித்துத் தக்க சிஷ்யர்களுக்குப் பாடம் சொ ல்லிவைத்தார். வேதம் எல்லையற்ற கடலைப்போன்றது. அத்த

னையும் படிக்க ஆயுள் போதாது பொறுமையிராது. இந்தக் கலி கால அவசரத்துடிப்பில் நிம்மதியாக அமர்ந்து உள்ளடங்கி, வேத உண்மைகளை அறிபவர் இரண்டொருவர்கூட இல்லை. வியாஸபக வான் வருங்காலத்தை அறிந்தே பிரம்ம சூத்திரத்தைச் செய்தார்.

வியாசர் உலகிற் சிறந்த சரித்திரப்புலவர். அவர் தமதுகாலத்தில் நடந்த பாரதக்கதையைப் பெரும் காப்பியமாக எழுதினர். பாண்டவர் விதுரன் துரியோதனுதிகள் அனைவரும் வியாஸரின் கண்முன்னே இருந்தவர்கள். வியாசர் பலமுறை துரியோதனன் செய்த தீமைகளைக் கண்டித்தார், பாண்டவருக்காகப் பரிந்துபேசினர். கண்ணனிடம் அவருக்கு அந்தரங்க பக்தியுண்டு. கண்ணன் கதையையும் அவரே பாகவதமாகப் பாடித் தன்மகன் சுகப்பிரமரிஷிகளுக்குச் சொன்னர். சுகர்பரிக்ஷித்துராஜனுக்குச் சொன்னர். வியாஸர் ஆசுகவி, ஆவேசக்கவி, சிறந்தசரித்திரக்கவி, தன்னையறிந்த பிரமஞானி, உலகை உள்ளங்கை நெல்லிக்கனிபோல் அறிந்த இல்லறஞானி. அவர் அக்காலப் போர்வினைகளில் ஈடுபடாமல், ஒரு தபோவனத்தில் பர்ணசாலை அமைத்துக்கொண்டு தருமபத்தினியுடன் வாழ்ந்தார். மகன் சுகருக்கு அவர் பிரம்ம சூத்திரம், பாகவதம், உபநிஷத்துக்கள் அனைத்தையும் பயிற்றினர்.

பிரம்மத்தை அறிந்தவன் பிரம்மமேயாகிறன். (ப்ரஹ்மவித்ப்ரஹ்மைவபவதி) என்ற உண்மைக்கிணங்க, சுகர்பிரம்மமாகி உலகை உள்ளத்தில் அடக்கி, எதற்கும் யாருக்கும் அடிமைப்படாமல் கட்டற்ற மலைய மாருதத்தைப்போல் தானேதானுக உலாவினர். வியாஸர் 'சுகா சுகா' என்று மகனை அழைக்கும்போது காட்டுமரங்கள்கூட 'ஏன் ஏன்' என்றெலிக்குமாம். சுகரின் பிரம்மஞான சக்தி அப்படிப்பட்டது.

பாரதயுத்தம் முடிந்தது. அந்த இரத்தக்காட்சியை வர்ணித்த பிறகு, வியாஸருக்கு உலகமே புளித்தது. மகனும் ஞானியாகப் போனன். வியாஸர் பரமசிவபக்தராய், காசியில் ஸ்ரீ விசுவநாதர் சேவைசெய்துகொண்டு தவம்புரிந்தார். பஞ்சாக்ஷரி மஹா யந்திரத்தை அவர் ஆற்றெழுக்கைப்போல ஜபித்தார். மகாபாரத ஏடுகளையும் வேத ஏடுகளையும் மாணவர்களிடம் ஒப்படைத்தார். பிரம்மசூத்திரம் ஒன்றையே வைத்துக்கொண்டு தக்க ஞானிகளுக்கு ஆத்மசாதனங்களை உபதேசித்தார். வியாஸர் பிக்ஷையால் வந்ததையே உண்டார். முதலில் வியாஸர் சக்தியை

# கமலாகரர் சரித்திரம்.

"பக்தி"

ஸ்ரீ பண்டரிபுரத்தில் கமலாகரர் என்றொருவர் இருந்தார். அவரது மனைவிபெயர் சுமதி. அவர்களுக்கு பதுமாகரர் என்று ஒரு புதல்வன் இருந்தான். மூவரும் நாள்தோறும் ஹரிநாமசங்கீர்த்தனம் செய்வதில் தவறுவதில்லை. கமலாகரர் தினமும் அவ்வூரிலுள்ள வீடுகள் தோறும் பிச்சை எடுத்து திருமாலடியாரை முன்னே உண்பித்து எஞ்சியதைத் தாமும் மகனும் மனைவியுமாக உண்டு வந்தனர்.

ஒருநாள் பிச்சைக்குப் போகும்போது ஒரு இடத்தில் ஹரி நாம சங்கீர்த்தன ஒலி கேட்டது. தந்தையும் மகனும் அவ்விடம் சென்றனர். அங்கு ஞானதேவர், நாமதேவர், கோராகும்பர், கபீர்தாசர் முதலானோர் ஹரிநாமசங்கீர்த்தனம் செய்து கொண்டிருந்தனர். இவர்களைக்கண்ட தந்தையும் மகனும் சாதுக்களைச் சாஷ்டாங்கமாக விழுந்து வணங்கி எழுந்துநின்று "சுவாமிகளே யான் செய்த முற்றவத்தால் இன்று தங்களைத் தரிசிக்கப்பெற்றேன்" ஆதலால் தாங்கள் எல்லீரும் அடியேனுடைய இல்லிற்கு எழுந்தருளி என்னை ஈடேற்றவேண்டுமென்று பிரார்த்தித்தார்.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

ஒப்பவில்லை. பிறகு ஒரு சோதனையால் மகா சக்தியான அன்னபூரணிதேவியையும் ஒப்பி உபாசித்தார்; சிவமும் சக்தியும் ஒன்றெனக்கண்டார். சைவம் வைஷ்ணவம் ஆகிய இரண்டு சமயங்களுக்கும் வியாஸர் பரமாசாரியராக விளங்குகிறார். முதிர்ந்த பருவத்தில் வியாஸர், காசியைவிட்டு இமாலயத்தில் ஏறி, பதரிநாராயணம்சென்றார். அவர் அங்கேதான் சமாதியில் அடங்கினார். அவர் ஆவி அங்கே சுழன்றுகொண்டிருக்கிறது. சங்கரபகவத்பாதாச்சார்யாரும், மத்வாசாரியாரும் தமது பிரம்ம சூத்திர விரிவுரைகளை வியாஸ பகவானிடமே படித்துக்காட்டியதாகக் கதையுண்டு.

வியாஸரை ஞானிகள் பிரம்ம சூத்திரவடிவாகவே உபாசிக்கிறார்கள். பிரம்மசூத்திர பதமே மனிதன் அடையும் உயர்நிலை என்பது கண்ணன் கருத்து.

அப்போது சாதுக்கள் அவருடைய பணிவைப்பார்த்து "தாசரே'! நீர் அடியார் பக்தியிற் சிறந்தவர் என்பதற்கு யாதோர் சந்தேகமும் இல்லை; இலௌகீக விஷயத்தில் மிகவும் எளியவர். நாங்களோ பலர் இருக்கிறோம்; ஆனபடியால் உமது அன்பு ஒன்றே போதியது என்றார்கள். அதைக்கேட்ட கமலாகரர்,, சுவாமிகளோ ஸ்ரீ பாண்டுரங்கனே எமக்குத் தாயும் தந்தையுமாயிருக்கிறான். அப்படி இருக்கும்போது அவனோர் குறையும் வைக்க மாட்டான் என்றார். சாதுக்கள் சம்மதித்தனர். கமலாகரர் சாதுக்களின் வருகையை ஓடோடியும் சென்று மனைவிக்கு உரைத்தார். சுமதியாரும் மனக்களிப்போடு எழுந்து வேண்டிய சாமான்களை அயல்வீடுகளிற் கடனாகப்பெற்று நல்ல உணவுகளைச் சமைத்தார்.

கமலாகரர் சாதுக்களை யழைத்துவரச்சென்றார். சுமதியார் பாயசம் பக்குவம் செய்யும்போது விறகு போதியதாயில்லாமையால் மகனை அழைத்து விறகு எடுத்துவா என்றார். சிறுவன் விறகு எடுக்கும்போது அதனுள் இருந்த நாகமொன்று தீண்டிவிட்டது. சிறுவன் எடுத்த விறகுடன் ஓடிச்சென்று தாயிடம் உற்றதை உரைத்து மயங்கிவிழுந்தான். சுமதியார் யோசித்தார் இன்று சாதுக்களின் பூசைக்குத் தடை ஏற்படக்கூடாதே, சிறுவனைத்தூக்கி தொட்டிலில் கிடத்தி பாயால் மூடிவிட்டு உணவுவகை எல்லாம் செவ்வனே பக்குவஞ்செய்தபின் சாதுக்களின் வருகையை எதிர்பார்த்திருந்தார்.

சாதுக்கள் வந்தனர். சாதுக்களெல்லாருக்கும் சுமதியார் பாதபூஜை செய்தபின் உணவு பரிமாறினர். அமுதுசெய்யுமுன் நாமதேவர் கண்ணனைப் பிரார்த்தித்தார். கண்ணன் வழக்கம்போல் அன்று எழுந்தருளவில்லை. கண்ணன் எழுந்தருளாமைக்குக் காரணம் ஏதோ இருக்கிறதென நாமதேவர் உணர்ந்து கமலாகரரைப்பார்த்து உமது மகனை எம்மோடு உண்ண அழையுமென்றார். அப்போ சுமதியார் அவன் தொட்டிலில் உறங்குகிறான் என்றார். உமது புதல்வனிங்கில்லாமல் நாம் உண்ணமாட்டோம் ஆனபடியால் அவனை எழுப்பிக்கொண்டு வாருங்கள் என்றார். அவனை இப்போ எப்படி எழுப்பினாலும் எழும்பமாட்டான் ஆகையால் நீங்கள் அமுது செய்யுங்கள் என்றார் சுமதியார்.

முற்றொடர்ச்சி.

# 'தொழுவார் தங்கள் துயர் தீர்ப்பாய்.'

(பிரம்மசாரி சோமசுந்தரம்)

இன்பமாக வாழ்வதற்கு வாழ்க்கையில் இடையூறுகள் உண்டாகாமல் இருத்தல் வேண்டும். இடையூறுகளாகிய சிக்கல்கள் அற்றவாழ்க்கையே இன்ப வாழ்க்கை. இன்பவாழ்க்கையினையுடையவர் இம்மையிலே பலராலும் நன்கு மதிக்கப்படுவர். மறுமையிலே ஆண்டவனது திருவருளுக்கும் உரியவராவர்.

"மண்ணில்நல் லவண்ணம் வாழலாம் வைகலும்
எண்ணில்நல் லகதிக்கு யாதுமோர் குறைவிலை"

இப்பூவுலகில் (இம்மையிலே) நன்மையாக வாழலாம்; (தினமும் இறைவனை) நினைத்தால் (மறுமையில்) நல்லகதி அடைவதற்கும் யாதொரு குறைவுமில்லை என்று திருஞானசம்பந்த நாயனார் வெற்றிமுரசு கொட்டுகிறார். எத்தகைய சிறப்புடைத்து இது.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

அதுகேட்ட நாமதேவர் வீணையுடன் எழுந்து விட்டலப் பெருமானைத் தியானித்து "எமக்குக் காட்சிகொடுத்தருளவேண்டும்" இல்லையேல் நாம் உண்பதில்லையென ஹரிநாமசங்கீர்த்தனம் செய்தார். பகவான் உடனே எழுந்தருளிவந்து நாமதேவரைத் தழுவி "உனக்கு என்ன வேண்டும்" என்றார். தொட்டிலில் தூங்கும் புதல்வனை எழுந்து எம்மோடிருந்து உண்ணச்செய்யும் என்றார் நாமதேவர். உடனே குழந்தை துள்ளி ஓடிவந்து தாயிடம் தண்ணீர் கேட்டான். சுமதியார் விரைந்து மைந்தனைத் தூக்கி நாமதேவர் அடியில் கிடத்தி சுவாமியின் தரிசனத்தினால் எங்கள் துன்பம் நீங்கியது என்றார். சாதுக்களெல்லாரும் உன்புதல்வனுக்கு நிகழ்ந்தது என்ன என்றார்கள். சுமதியார் உற்றதை உரைத்தார். இது மிகவும் அற்புதம் என்றார்கள் எல்லோரும். நாமதேவரை நீரே விட்டலன், நீரே பாண்டுரங்கன் என்று ஆனந்தக் கூத்தாடினார்கள்.

நாமதேவர் விட்டலா விட்டலா விட்டலா விட்டலா என்று ஹரிநாம பஜனை செய்தார்.

இத்தகைய மேலான இன்பவாழ்க்கையை அடைவதற்கு ஒரு வழி இருந்தே ஆகவேண்டும். இவ்வுலகம் எல்லார்க்கும் பொதுவெனினும் அது எல்லார்க்கும் ஒரே காட்சிகொடுக்கிறதில்லை; ஒவ்வொருவனுக்கு ஒவ்வொருவிதமாக அது தோன்றுகிறது. இத்தகைய சிருஷ்டிபேதத்துக்குக் காரணம் பிரபஞ்சமன்று. உலகம் உண்மையில் நல்லதுமன்று, கெட்டதுமன்று. என்றைக்குமுள்ளபடி அது தன்மயமாயிருக்கிறது. ஆனால் பார்ப்பவரது மனப்பான்மைக்கு ஏற்றவாறு அதன் தோற்றம் மாறுபடுகிறது. துஷ்டன் ஒருவனுக்கு உலகனைத்தும் துஷ்டமயம்; நல்லான் ஒருவனுக்கு அது நன்மைமயம். ஆதலால் உலகத்தை ஒழுங்குபடுத்துதற்குப் பதிலாக மனிதன் தன்னைத்தானே சீரமைப்படுத்துவானாகில், அவனது நேர்மைக்கு ஏற்ப அதுவும் நயம் மிகுந்ததாகத் தென்படும்.

தேவலோகத்தில் பிறந்து, கற்பகத் தருவின் கீழிருந்து, காமதேனுவை நுகர்வதுதான் இன்பமென்று மக்கள் எண்ணுவது தவறு. அறிவுடையோர் எங்கு பிறப்பினும், எங்கிருப்பினும் இன்பம் காண்பர். மனமே எதற்கும் காரணம். கதிரவன் ஒளி அரண்மனையிலும் குடிசையிலும் படுகிறது, மலை உச்சியிலும் பள்ளத்தாக்கிலும் பரவுகிறது. அதுபோலவே மனத்தின் கதிரொளி இன்பத்திலும் துன்பத்திலும் பற்றி நிற்கும். துன்பத்தினைக்கண்டு கசப்பதும் இன்பத்தினைக்கண்டு களிப்பதும் அறிவுடையோர் செயலன்று. துன்பத்தினையும் இன்பமாகக் கொள்வதற்கு மிகப் பயிற்சிவேண்டும். அப்பயிற்சிதான் வாழ்க்கை. இதை யாவரும் நன்கு உணர இருடி ரமண வள்ளல் நம் நாட்டில் அவதரித்து உலகனைத்தாருக்கும் தன் வாழ்க்கையில் வாழ்ந்துகாட்டியுள்ளார்.

துன்பத்தின் மாட்சியை உணர்ந்தவரே உண்மையான இன்பத்தின் மாட்சியை உணர்ந்தவராவர். கடலென ஆழ்ந்து பரந்திருக்கும் பிறவித்துன்பத்தை நன்குணர்ந்தே புத்தர் தமது அரச வாழ்க்கையினைத் துறந்து அல்லும் பகலும் அம்முயற்சியிலேயே முனைந்து ஈடுபடலாயினர். துன்பம் நமது அஞ்ஞானத்தை அறிவிக்கும் சின்னமாகின்றது.

‘பிறத்தலும்பிறந் தாற்பிணிப்பட வாய்ந்(து) அசைந்(து)உடலம்புகுந்து
இறக்குமாறு(உ)ளதே இழித்தேன் பிறப்பினைநான் [நின்(று)
அறத்தேயே புரிந்த மனத்தனாய் ஆர்வச் செற்றக்குரோத நீக்கியுன்‘
திறத்தனாய் ஒழிந்தேன் திருவாரூர் அம்மானே’’

யான் பிறந்த சிறிது காலத்திற்குள் பிறப்போடு இறப்பும் வருமேயென்று உணர்ந்து, பிறவியை வெறுத்தேன்' என்றுமாம். திருநாவுக்கரசர் இளமையிலே உலகம் நிலையாமை உணர்ந்து அறங்களைச் செய்து துறவு பூண்டமை இங்கு ஞாபகத்தில் வைக்கத்தக்கது.

போகங்கள் நிறைந்த உலகிலே மனிதன் கண்ணெதிரில் அவற்றை அனுபவிக்கப் பல சாதனங்கள் இருப்பதைக் கண்டு தன்னை மறந்து அவற்றில் மூழ்கிவிடுகிறான்; அதனால் இன்னொரு பக்கம் துன்பம் இருக்கின்ற தென்பதை அறியும் அவசியமும் அவனுக்குத் தோன்றுவதில்லை. வருங்காலம் எப்படி இருக்குமென்று யாரும் சொல்லமுடியாது. ஆகவே, உள்ளதை அனுபவிக்காமல் விடுவது எதற்காக? என்று நினைக்கின்றான். அதாவது 'கடவுள் தரிசனம் கிடைக்குமோ கிடைக்காதோ, நித்தியானந்தம் அடைவனோ என்பது யாருக்கும் தெரியாது. ஆனால் உலக இன்பத்தை அனுபவிப்பதோ என்கையில உள்ளது இதை ஏன் விடுவேன்? என்று எண்ணி விளக்கில் விழும் விட்டில் பூச்சியைப் போல் விழுகின்றான். முடிவில் தீயிடத்து ஜ்வாலை விட்டு எரிய ஆரம்பிக்கும்போது, அதாவது, தான்பட்ட கஷ்டத்தால் உலக போகங்கள் துன்பங்களைக் கொடுக்கின்றனவே யல்லாது சாந்தியையும ஆநந்தத்தையும் கொடுக்கவில்லையே என்று உணர நேரிட்டபோது 'ஆ' என் செய்துவிட்டேன்?' என்று கதறுகின்றான் காலம் தவறி விட்டதற்கு சாந்தி எங்கிருந்து கிடைக்கும்? அடக்கம் இல்லாத போக வாழ்வில் இறங்கி மனிதன் இந்திரிய வசமாகித் தானே பந்தத்துக்குட்பட்டு விடுகிறான். அதனால் பிறகு அவனுக்கு இச்சை இருந்தாலுங்கூட ஒன்றும் செய்ய இயலாதவனாய் விடுகிறான். மின்னென மறையும் உலக ஆசையை நிறைவேற்ற ஓடி உழல்வது நெய்யைத் தீயில் இடுவதை ஒக்கும்.

ஒவ்வொருவரும் இன்பத்தையே நாடுதல் இயல்பு. ஆயினும் இன்பம் மக்களது விருப்பிற்கு இணங்கி வாய்ப்பதன்று. இன்பம் எங்கிருந்து கிடைக்கும். உன்னைவிட்டு வெளியில் இன்பமில்லை. நீயே மற்றவருக்கு இன்பமாகத் தோன்று. வாழ்க்கையை இன்பமயமாக்குவது கடினமானவேலை. மண்ணில் பொன் கலந்துள்ளது; மணிகள் கலந்துள்ளன. பெருங் கடலில்

பவழமுண்டு. அப்பொன்னும், மணியும், முத்தும் மக்களின் மேனியில் மிளிர்வதற்கு முன் எவ்வளவு பாடுபட வேண்டியிருக்கின்றது. துன்பத்தோடு கலந்துள்ள இன்பத்தைக் காணலாம். இன்பத்தை அடைய நாமே முற்படவேண்டும். வீணையில் இசை இருப்பதுபோல் வாழ்க்கையில் இன்பமுண்டு. வீணையை மீட்டத்தெரிந்தால் இசையை எழுப்பலாம். அதுபோல வாழ்க்கையை நடத்தத்தெரிந்தால் இன்பத்தைக் காணலாம்.

உண்மை ஆனந்தத்தைக் கொடுப்பதற்குச் சிற்றின்பம் வன்மையுடைத்தன்று. அது அழியத்தகுந்ததும் அற்பமுமாய வானந்தமே. பேரின்பமோ பேரானந்தத்தைப் பயக்கவல்லது. சிற்றறிவுடைய உயிர்கள் அவாவும் இன்பத்திற்கும் வேறுபாடு என்னையெனின்; இன்பம் அறிவின் தரத்திற்கு ஏற்பப் பெரியதாயுஞ் சிறியதாயும், நிலையுடையதாயும், நிலையிலதாயும் பலதிறப்பட்டு தோன்றுமென்பதும் அதுகொண்டு தெளியப்படும். உயிர்கள் உலகத்துப் பொருள்களின் சேர்க்கையாலும் இன்பம் எய்தக் காண்கின்றோம். உலகத்துப்பொருள்கள் அறிவில்லாதனவும் நிலையில்லாதனவுமாய்ப் போதலின் அவற்றின் சேர்க்கையாற் பிறக்கும் இன்பமும் நிலையில்லாமல் அழிந்துபோதலுடன் தானழிந்தபின் துன்பத்தையும் விளைவிக்கின்றது. இனி உயிர்களெல்லாம் சிற்றறிவினவாயும் இருத்தலின் அவற்றின் சேர்க்கையாற்றோன்றும் இன்பமே நிலையின்றி அழிதலுடன் பின்னர் துன்பத்தையும் வருவிக்கின்றது. என்றும் அழியாது நிலைத்து நிற்கும் பேரின்பத்தையே அடையவேண்டும் என்னும் நோக்கத்துடைய உயிர்கள் அப்பேரின்பத்தைத் தருதற்குரிய பேரறிவுப்பொருளை நாடாமல், மின்னல் போலத்தோன்றித் தோன்றிச் சிற்சில நொடியில் மாய்ந்துபோகும் சிற்றின்பத்தைத் தந்து பின் துன்பத்தையே பயக்கும் உலகத்துப் பொருள்களையும்; சிற்றுயிர்களையும் நாடுதல் தமக்குள்ள சிறிய மயக்க வறிவின் பான்மையினாலன்றோ? சிற்றறிவால் வருவது சிற்றின்பம், பேரறிவால் வருவது பேரின்பமுமாகும். சிற்றறிவானது தனக்கு எட்டிய சிறு பொருளையே நாடும்; பேரறிவானது எல்லா அறிவும் எல்லா இன்பமும் நிறைந்த பெரும் பொருளையே நாடும்.

(தொடரும்)

# கதிர்காமனைப் பாடுவோம்.

——:-;——

(காவடிச்சிந்து மெட்டு.)

1 கதிர் காமக் கந்தன் எந்தன் தெய்வம்—அவன்
கழலினைப் பாடியே நாமுய்வம்—முருகன்
சதிர் ஆடும் மயிலேறி சாந்தி எனக் கரங்காட்டி
ஆடுவான்—நம்மைக் கூடுவான்.

2 சித்தக் கலக்க மொழி புள்ளே—அன்பு
பித்துப் பிடிக்க வேண்டும் உள்ளே—எட்டுச்
சித்தியும் வணங்கு முயர் தன்மய நிலையைக் காட்டி
வருவான்—தன்னைத்—தருவான்.

3 துதிக்க இனிக்கும் கந்தன் நாமம்—சொன்னால்
தூஷணை வினைகட் கிடும் நாமம்—நம்முள்
பதிக்குப் பதியாய் நிற்கும் பாலவடி வேலனை
பாடுவோம்—கொண்—டாடுவோம்.

4 நானைக் கொல்லும் கதிர் காமக்காக்ஷி—அங்கு
நம்முன் தோன்றும் யானை புலி சாக்ஷி—எங்கும்
ஊனை உருக்கும் அரஹரோகராஎன்ற அன்பு
நாதமே—ஊட்டும்—போதமே.

5 உத்தமர் உலகில் வாழ வேண்டும்—கொடும்
உதவாப் பிதற்றல் மாய வேண்டும்——என்று
சத்தம் போடுதல் நிறுத்தி சங்கரி பாலன் புகழை
நாடுவோம்—ஒன்று—கூடுவோம்.

6 காடுமலை சுற்ற வேண்டா மண்ணே—நொந்து [பர்
வீடுவாசல் வெறுக்க வேண்டாங் கண்ணே—அன்
கூடுமிடம் கூடிக் குமரன் குணத்தை யுருகிச்சொல் நீ
காடும்—இன்பம்—கூடும்.

7 கள்ளமற்றார் உள்ளங் கந்தன் வீடு—அன்பு
உள்ளம் பாடும் பண்ணவன் தன்கூடு—அவன்
அள்ளப் புல்லத் தெவிட்டாத் தன்னைத் தானே ஓடிவந்து
மகிழ்வான்—நம்மைப்—புகழ்வான் [தந்து

8 படிப்புக்கும் பகட்டுக்கும் எட்டான்—அன்பு
துடிப்பில் தன்னை மறந்து கெட்டான்—கந்தன்
மிடி வகை போக்கித் தானே சேவகனாய்ப் பணிசெய்து
காப்பான்—என்றும்—பார்ப்பான்.

9 இச்சை கிரியை ஞானமென்ற சக்தி—அன்பு
இச்சையாய்க் கொண்டான் அளிக்க முத்தி—நாம்
இச்சைகள் விலக்கி என்றும் ‘இன்பா உனக்காள்'' எனில்
இசைவான்—விட்டு—அசையான்

10 ஆனந்தம் ஆனந்த மென்று பாடுவோம்—புகழ்
ஆனந்த மென்றுண்டு ஒன்று கூடுவோம்—அவன்
ஆனந்தக் கூத்தாடி நம்முன் தானந்தமில்லா நிலையில்
ஆடுவான்—நாமும்—பாடுவோம்.

சாது ஸ்ரீ முருகதாஸ.

# அன்னைத் தெய்வம்.

(தென்னாப்பிரிக்கா டர்பன் திரு. ச. மு. பிள்ளை அவர்கள்.)

உலகத்தில் தத்துவ ஞானிகள் கடவுள் இருக்கிறார் என்றும் இல்லையென்றும் வாதித்திருக்கிறார்கள். வாதித்தும் வருகிறார்கள். அவ்விரு சாராரில் கடவுள் உண்டென்று வாதிப்பவர்கள் இயற்கை வனப்பையும் அதிலே தோன்றும் ஒழுங்கு, திட்டம், விதி ஆகியவைகளையும் நிதர்சனக் காட்சியாகக் காட்டுகின்றனர்.

நள்ளிரவில் வான வெளியை நிமிர்ந்து பார்த்ததும் கோடிக் கணக்கான வான புஷ்பங்கள் மின்னுகின்றன. அந்த அகண்டமான நீலத்திரையில் அந்த மின்னொளிகளைப் பதித்தது யார் என்று சிந்தனையில் ஆழ்ந்து இது பகவானுடைய செயலன்றி வேறு ஒன்றுமில்லை என்று ஞானமுற்றவர் கூறுகின்றனர்.

கண்ணைக்கவரும் விதமாகவும் மனத்தைக் கொள்ளைகொள்ளும் விதமாகவும் மானிடத் திறமைக்கு எட்டாததாகவும் விதவிதமான புஷ்பங்களும், ஒவ்வொரு புஷ்பங்களுக்கும் ஒவ்வொரு விதமான வர்ணம் ஏற்றப்பட்டும், நறுமணம் புகுத்தப்பட்டு மிருப்பதை ஆங்கிலக் கவி வோர்ட்ஸ் வொர்த் நோக்கினார். அவர் மனம் அந்த புஷ்பங்களின் மோகன சொரூபத்திலே ஈடுபட்டது. அந்த அற்புத சிருஷ்டியைக் குறித்து ஆழ்ந்து சிந்தித்தார். அச்சமயத்தில் அந்தப் புஷ்பங்கள் தாங்கள் பிறந்து வளர்ந்த கதையை அவர் செவியில் ஓதின.

சிங்காரப் புஷ்பங்கள் ஒவ்வொன்றிலும் இலங்கும் ஜீவசக்தி தோன்றி, வண்ணமாக வளரும் கதையை அந்தக் கவிசிரேஷ்டர் கேட்டு அதிலிருந்து கடவுள் மகிமையைக் கண்டார். அவர் மனதிலே கடவுள் சக்தி பொங்கி எழுந்தது.

இவை கடவுள் பக்தர்கள் கண்டு கூறும் அதிசயங்கள். கடவுள் பக்தியில்லாதவர்களும், கடவுளே இல்லையென்று சொல்லுகிறவர்களும், தங்களுடைய வாதத்திற்குச் சான்றாக, உலகத்தில் கா

ணப்படும் அக்கிரமங்களேயும், கொடுங் கோன்மைகளேயும், இரக்கமற்ற சம்பவங்களேயும் காட்டுகின்றனர். ஆகாயத்தில் தோன்றும் நட்சத்திரங்களும், இன்னும் பல இயற்கைச் சம்பவங்களும், இயற்கையில் உண்டாகும் கருமங்களே யொழிய, இயற்கைக்கு அப்பாலுள்ள பரம்பொருளின் செயல்களல்ல வென்று வாதிக்கின்றனர்.

ஆனல் அவர்கள் பாரபட்சமற்ற புத்தியுடன் சிருஷ்டி இனங்களில், பூச்சிகள் முதற்கொண்டு, மானிடராவரைசியில் ஒவ்வொரு இனத்திலும் தாயும் தகப்பனு மிருப்பதைப் பார்த்திருப்பார்கள். எல்லா இனத்திலும் தாய்மார்கள் குழந்தைகளிடம் வாஞ்சை காட்டுகிறார்களல்லவா? அப்பேர்ப்பட்ட தாய்மைக்குணத்தைச் சிருஷ்டித்தது யார் என்றுதான் நான் அவர்களைக் கேட்கின்றேன்.

சிசுக்களிடம் அன்னைக்கு உண்டாகும் வாஞ்சையும், அன்னை சிசுக்களை தாலாட்டி, பாலூட்டி, மைதீட்டி வளர்க்கும் விசித்திரமும்; ஒழுங்கும் ஒரேமாதிரியாக எல்லா ஜீவ ராசிகளுக்கும் அமைந்திருப்பது, ஒன்றேபகவான் இருக்கிறார் என்பதற்குப் போதிய அத்தாட்சியல்லவா? "பகவான் எல்லா இடங்களிலும் ஒரே காலத்தில் இருக்க முடியாதாகையால், அன்னையை உண்டாக்கி அவர்களுக்குத் தாய்மைக் குணத்தைத் தந்தார்," என்று யூதர்களின் பழமொழி ஒன்று உண்டு.

நம்முடைய தேசமானது அன்னையைத் தெய்வமாகக் கொண்டாடும் தேசம். அப்பேர்ப்பட்ட தேசமக்களுக்கு அன்னையின் மகிமையைச் சொல்ல அதிக முயற்சி எடுத்துக்கொள்ளவேண்டிய அவசியம் இல்லை. இந்த உலகத்தில் கடவுளை ராஜாதி ராஜன் என்று சிலர் வணங்குகின்றனர். மற்றும் சிலர் பரமபிதாவென்று வணங்குகின்றனர். அவைகள் எல்லாவற்றையும் விட மாதுரு தெய்வ சம்பிரதாயமே மிகச் சிறந்ததென்று நான் கருதுவேன்.

இந்திய சமூகத்தின் வரலாற்றை அறியாத அன்னிய நாட்டினர் சிலர் நாம் பெண்களை ஞாயமாக நடத்துவதில்லையென்று வாதாடுகின்றனர். நம்மை அவ்விதம் இகழ்வதானது அநியாயத்திலும் அநியாயமாகும். பெண்களை தாய்மாராகக் கருதுவதை

# ஆத்ம சிந்தனை.

(ம. சி. சிதம்பரப்பிள்ளை)

சிந்தனையற்று உளும்றும் கைங்கரியங்கள் ஒருவர் சிந்தனையையும் கவர வலியற்றன. சிந்தனைக்குரிய சீரிய செயல்களிற் சிறார்கள் முதல் சிறந்த பெரியோர்கள் வரை தம் நேரத்தை உபயோகித்தல் நலம். அதனால் ஆன்ம பலன் வந்தடையும்.

இச்சிறு கட்டுரையில் சிந்தனைக்குரிய நூல்களிற் றலையாய நூலொன்றினைப் பற்றிச் சிந்திக்கலானேம். அந்நூலோவெனில் 'மனப்பயத்துடன் துணையற்றுச் செயலற்று, என் செய்வேம்' என்று சிந்தியாது அலையும் ஒருவனுக்கு 'ஏ மனமே! ஏன் வீணுகத் துக்கிக்கின்றாய்' உனக்குத் தேவையான வழியைப்பார்த்துச்

---

முற்பக்கத்தொடர்ச்சி.

விட மேலாக பெண் சமூகத்திடம் பக்திகாட்டக்கூடியது என்ன இருக்கிறது. நாம் அப்பேர்ப்பட்ட சிரேஷ்டமான வேதாந்தத்தைக் கடைப்பிடித்தொழுகுகின்றோம். நம் வீடுகளிலே நம் தாய்மார்களுக்குப் பணிந்து நாம் நடந்துகொள்ளவில்லையா?

ஜெர்மனியில் ஹிட்லர் சர்வாதிகாரியாயிருந்தபோது பெண்கள் உத்தியோகத்திற்கு வந்தால் "உனக்கு உத்தியோகம் இடையாது மணம் புரிந்து மக்களைப்பெற்று மகிழ்ந்திரு பெண்ணே' என்று சொல்லி அனுப்புவதாக நான் கேள்விப்பட்டேன். அது உண்மையாயின் அச்செயல் மிகச் சிலாக்கியமானதென்று யான் கருதுவேன்.

நான் பெண்களை பொது வேலைகளில் ஈடுபடக்கூடாதென்று வாதிப்பதாக எண்ணவேண்டாம். ஆணும் பெண்ணும் இரு சக்திகளென்பதும் அவ்விரு சக்திகளும் சேர்ந்து புரியுந் தொண்டு சிறப்புவாய்ந்து இருக்குமென்பதும் நான் அறிவேன்.

நாம் ஒரு விஷயத்தை மாத்திரம் மறவாமல் இருக்கவேண்டும். அதாவது பெண்கள் தாய்த்தெய்வங்களாக இருந்து புகழுடையக் கடமைப்பட்டிருக்கின்றனர். அப்பேர்ப்பட்டவர்கள் தாய்த் தன்மைக்கு பாதகம் ஏற்படக்கூடாது. இது ஒன்றே கவனிக்கவேண்டிய விஷயம்.

சிந்தித்து அதன்படி நடக்க வழிகாட்டியாக யாம் இருக்கிறோம். என்னைப்பற்றிச் சிந்தித்தாலே சகல செல்வமும் வந்தடையுமே! மனமும் சாந்தியடையுமே!'' என்று சங்கநாதம்போல் கதற வல்லது. அந்நூல் "ஆத்ம சிந்தனை'' என்பதுவேயாம்.

'ஆத்ம சிந்தனை', இது ஓர் சிறந்த, தெய்வீகத்தன்மை நிறைந்த திரு அமிர்தமாகும். இதனை அளித்த பேரறிஞர் ஓர் அரசனாவன். மார்க்க அரேலியர் (Marcus Aurelius) என்னும் ரோமா (Rome) புரிச்சக்கரவர்த்தியாகிய இவர் தமது பாஷையில் இயற்றிய 'ஆத்ம சிந்தனை'யை பாரதமாதாவின் தவப்புதல்வரும், பாரதநாட்டின் மன்னரும் தமிழ்த் தொண்டனுமான ஸ்ரீசக்கரவர்த்தி இராஜகோபாலாச்சாரியார், அத்திருநிறைந்த பொக்கிஷத்தை நாம் இன்புறப் பேசும் மொழியில் தந்துள்ளார். அதனை "அடிக்கடி வாசிப்பதினால் மன உறுதியும் சாந்தியும் மக்கள் அடைவார்கள் என்பதில் சந்தேகமில்லை'' என்று எங்கள் சக்கரவர்த்தி அவர்களே நூலின் முன்னுரையில் நாம் சிந்திக்கும் வண்ணம் கூறிப்போந்தார். இந்நூலுக்கும் கீதைக்கும் எவ்வளவோ ஒற்றுமை உண்டென ஆசிரியர் வற்புறுத்துகின்றார். இடையிடையே அவ்வித ஒற்றுமையை எம்மனோரிலுள்ள பெருங்கருணையினால் ஆங்காங்கே எடுத்துக் கூறுகின்றார்.

'ஆத்ம சிந்தனை' என்னும் தெவிட்டாத இம்மாமலர் நூற்றெண்பது மொட்டுக்களையுடையது; "ஆன்மாவைப்பற்றிச் சிந்தனை செய்யும் ஒவ்வொருவரும் இப்புத்தகத்தைக் கண்டிப்பாக வாங்கிப் படிக்கவேண்டும். இது வெறும் புத்தகமல்ல. ஒரு வற்றாத பொக்கிஷமாகும்'' "இந்த நூலின் ஒவ்வொரு பக்கமும் ஒரு கல்விக் களஞ்சியமாகும். பாலும் தெளிதேனும் கலந்த சுவையுடைய இந்நூலின் பெருமையை இதனை வாங்கிப் படித்து ஆனந்திக்குமாறு வேண்டுகின்றோம்.

"ஆத்ம சிந்தனையிலிருந்து மலர்ந்த முதல் மொட்டு இது.

காலையில் எழுந்ததும் அடியிற்கண்டபடி உனக்குள் சிந்தித்துக்கொள்:— இன்று நான் கலகக்காரனைக் காண்பேன், நன்றிகெட்டவனைக் காண்பேன், மரியாதையற்றவன், மோசக்காரன், பெருமைக்காரன் முதலிய எல்லோரையும் சந்திப்பேன். அவர்கள் குற்றங்களுக்கெல்லாம் காரணம் நன்மை தீமை அறியாத

அவர்களுடைய அறியாமையேயாகும். ஆனால் நானோ, நன்மை தீமைகளை நன்கு அறிவேன், நன்மையே நலம் தருவதென்றும் தீமையே தீமை பயப்பதென்றும் நான் அறிந்திருக்கின்றேன். எம்பால் ஒருவன் தீங்குசெய்தால் அவன் எனது உறவினன் என்பது எனக்குத்தெரியும். உடல் உறவால் உடன்பிறந்தானல்லனாயினும் ஆன்மநேய ஒருமைப்பாட்டால் அவன் எனக்கு உடன் பிறந்தவனே. அவன் எனக்கு என்ன தீங்கு செய்ய முடியும்? என்னைத் தவிர, யாரும் என்னைக் கெடுக்கமுடியாது. தீங்கிழைப்பவர் எனது உறவினரேயாதலின் அவர்கள்மீது நான் கோபமோ வெறுப்போ கொள்ளலாகாது.'' — அழகிய மலர் தான்!

இம் மொட்டிலிருந்து ஊறும் நறுந்தேனானது என்றும் ரசமாகவே இருக்கும். கெட்டுப்போகும் தன்மையற்றது. இவ்விதமாகவே மற்றும் மொட்டுகளும் பாலும் தெளிதேனுமாக, வாசிக்க வாசிக்கத் தெவிட்டாததும் ஒவ்வொன்றையும் சிந்திக்கச் சிந்திக்கச் சிந்தனையை ஊக்கப்படுத்தக் கூடியதும் பொன்னோ மணியோ மரகதமோ என்று விலைமதிக்க முடியாததுமாயிருக்கின்றன.

"விருப்பு வெறுப்பு இரண்டையும் நீக்கிய உண்மைத் தவமும் ஒப்புரவு அறிந்து செய்தலாகிய இல்லறமுமே மார்க்க அரேலியருடைய உபதேசம். இன்பமும் துன்பமும் ஒருவன் சுதந்திரம், அவை உள்ளத்தின் நிலையேயன்றிப் புறப்பொருளில் இல்லை. உலகம் முழுதும் ஓர் உயிர்கொண்ட அமைப்பு. அதில் நீ ஓர் அங்கமாவாய். அதன் நன்மையை நாடுவதே உன் இயற்கைத்தருமம். ஆகவே ஒப்புரவறிந்து செய்தலே உன் கடமை. அதுவே உனது நலம், நேர்வனவெல்லாம் தனி ஒருவனுக்குத் துன்பம்போலத் தோன்றினும் உலகத்தின் பொதுநலனுக்காகவே நேரும். ஆகையால் எது நேரினும் மனம் கலங்காமல் பொறுத்துக்கொள்ளக்கடவாய். சாந்த சமநிலையே தெய்வபக்தி. அதுவே ஆனந்தம்'' என்பதுவே 'ஆத்ம சிந்தனை'யில் அடங்கிய பொருள் என்பதை நமது தமிழ் மகன் அழகிய நடையில் திறம்படக்கூறியுள்ளார்.

சிந்தனைக்குரிய அரிய விஷயங்கள் அதிகம் உண்டு. அன்பர்கள் உள்ளத்துக்கு இந்நூலின் மகிமையை ஒருவாறு காட்டியுள்ளோம். அதனைப் படித்துச் சாந்தியடையுங்கள்.

சாந்தி! சாந்தி! சாந்தி!

# ஆத்மசித்திக்கான சாதனங்கள்.

[ஸ்ரீமதி சுந்தரம்மாள் ராகவாச்சாரி]

## (4) அஞ்சாமை. (Fearlessness)

அஞ்சாமை என்பதற்கும் 'தைரியம்' என்பதற்கும் வித்தியாசம் உண்டு. தைரியவான் என்று சொல்லப்படுபவன், சிலவேளைகளில் பயங்கொள்ளியாயிருப்பதுமுண்டு. புதிய சிப்பாய், உறுதிப்பாட்டுடன் போர்க்களம் நோக்கிச் செல்கையில், மனதில் தைரியம் நிரம்பினவனாகவே கிளம்புகிறான். ஆனால் வெல்லிங்டன் பிரபு கூறியவாறு "யுத்தகளத்தில் ஏற்படக்கூடிய விபத்துக்களையும், அபாயங்களையும் அவன் அறிவான். இருந்தும் உறுதிப்பாடு மேலீட்டால் தைரியமாக அவைகளை எதிர்த்துத்தாக்க சித்தமாகிறான்." ஆயினும் இந்த வீரச்சிப்பாயும் அச்சம் இல்லாதவனெனத் திட்டமாய்க் கூறமுடியாது, அச்சமே மனதில் உதிக்காமல் அஞ்சாநெஞ்சம் படைத்தவனாவதற்கு, வெகு உயரியதான மனப்பெருக்கமும், தீர்க்க அறிவும் தேவை. அஞ்ஞான (அறியாமை) த்தினால் விளைவது அச்சம். ஆகையினால் ஒரு விஷயத்தில் வெகு தைரியவானாக இருப்பவன் வேறொன்றில் கோழை மனதும், அச்சமும் படைத்தவனாயிருப்பதுண்டு. போர்க்களத்தில் ஆயுத வீச்சுக்களுக்குப், குண்டு வீச்சுக்களுக்கும் பயப்படாது, மரணத்தை பொருட் படுத்தாமல் எதிர்த்துப் போர்புரியத் துணியும் போர்வீரன் ஒருவனை ஒரு இரவு முழுவதும் தனிமையாக ஒரு இடுகாட்டில் (சவக்குழி நிரம்பிய இடத்தில்) இருக்கும்படி சொன்னால் அவன் அதற்கு இணங்கமாட்டாத பயங்கொள்ளி என்பது ருசுவாகும். அதேபோல, கடவுளே இல்லை என்றும் சமயநூல் கதையையும், புராண இதிகாசங்களையும் தீக்கிரையாக்கவேண்டுமென்ற வாதம்பேசி இறுமாப்புடன் வீரம்பேசும் மக்களுள் பலர் நோய்வாய்ப்பட்ட சமயத்தும், புலி, சிங்கம், முதலிய காட்டு மிருகங்களால் துரத்தப்பட்ட பொழுதும், ஏதாவது பெரிய விபத்து நேர்ந்த விடத்தும், வீரம் இழந்து, மனந் தடுமாறி அச்சமேலிட்டு, கடவுளையும் தாமறியாமலே வாய்விட்டுக்கூப்பிடுவதையும் நாம் பார்த்திருக்கிறோம். நள்ளிரவில் அச்சமில்லாமல் கன்னம் வைத்துத் திருட்டுத் தொழிலில் ஈடுபட்டுக் கோபவெழு

ச்சியில்லாது, வன்னெஞ்சாகக் கொலைபுரிபவருங்கூட பிடிபட்டு நீதிபதியால் தண்டனை அடைந்து கொலைக்கூடத்திற்கு அழைத்துச் செல்லப்படுகையில், அச்சமேலிட்டு அலறுவதுமுண்டு. பேய் அடைந்தவீடு, என்று சொல்லப்படும் வீட்டிற்குள்ளும் அவ்வீடு இருக்கும் தெருவின் வழியுமேகூட ஜனங்கள் இரவில் நடக்க அஞ்சுவர்;

ஆனால், "காயமே இது பொய்யடா, காற்றடைத்த பையடா" இந்தச் சரீரம், சரீரத்தை விட்டு ஆன்மா அகன்றபின் இச்சரீரம், மனிதனணியும் அங்கியேபோன்றது என்ற உண்மைகளை அறிந்த ஆத்ம ஞானிக்கு இடுகாட்டில் தனித்திருக்கப் பயமே இருக்காது. நாம் அணிந்து கழற்றிவைக்கும் சொக்காய் துணிகளைச் சேமித்து வைப்பதற்கான அலமாரிக்குச் சமானமானது. சவக்குழிகளடங்கிய கல்லறை என்ற தத்துவத்தை யறிந்தவருக்குப் பயம் ஏது? நம்முடைய மனதில் அப்போதைக்கப்போது உதிக்கும் (பயம்) அச்சம் என்பது நமது சரீரத்தின் சுகநிலையைச் சிதைவுறச்செய்யவல்லதோர் மனவெழுச்சி. மனோதைரியம் நமது தேகச்சுகாதார நிலைமையை எத்துணை பலப்படுத்த வல்லதோ அதைப்போல் பதின்மடங்கு அச்சம் தேகநிலையைக் குறைக்கவல்லது. எதிர்பாராது சடுதியில் உண்டாகும் அச்சம், இரத்தாசயத்தைப் பளீர் என்று இறுக்கிச் சுருக்கிவிடுகிறது. இரத்தோட்டம் தடைப்பட்டு, முகம், கண்கள் வெளிறி நிறங்குன்றி, உதடுகளும் நீலநிறமடைகின்றன. அச்சம் என்ற மனஉணர்ச்சி தீர்க்க ஆயுளைக் குறைத்துவிடும். நோய்களுக்கு இடமுண்டாக வல்லது. நோயாளிகட்குப் பிணியகற்ற மருத்துவ முறைகளைக் கையாளும் வைத்தியர்கள் முதன்முறையாக "அச்சம் அகற்றல்—தேறுதல் சொல்லல்" என்ற முறையைக் கையாளுகிறார்கள் அல்லவா? நோயாளியின் மனதில் அச்சம் குறைந்து உற்சாகம் ஏற்பட்டாலே நோவு பாதிக்குமேல் குணமாகி விட்டதாகச் சொல்லலாம். பயம் என்பது, உயிரைப்பற்றியதுமட்டுமல்ல—மக்கள் பயமுறுவதற்குக் காரணமாயுள்ளவை பல:—தரித்திரம், நோவு, மூப்பு, விபத்து, திக்கற்றநிலை, பொருள் ஈட்டுவதில் தடை, உத்தியோக நிலையில் தாழ்வு, அதிகாரவீழ்ச்சி, பதவியில் பங்கம், தம்மைப்பற்றி அயலார் கொள்ளும் இழிவான அபிப்பிராயம், சமூக இயக்கத்தில் கலந்துகொள்ளமுடியாமை முதலியன. (தொடரும்)

# பெண்களும் கடமையும்.

(பாக்கியம்)

ஒரு நாட்டின் சிறப்புக்கு மக்களில் ஆடவர் எங்ஙனம் காரணமாக இருக்கின்றார்களோ அங்ஙனமே பெண்களும் காரணமாகின்றனர். நாட்டின் சிறப்பு அந்நாட்டு மக்களின் அறிவு, ஆற்றல், செல்வம் என்பவற்றைப் பொறுத்ததாகும். இம்மூன்றுக்கும் உரிய தெய்வங்களாக முறையே கலைமகள், பராசக்தி, திருமகள், என்பவர்கள் போற்றப்படுகின்றனர். நாட்டின் சிறப்புக்குக் காரணமாய், மேலே கூறிய மூன்றுக்கும் அத் தேவதைகளாக மூன்று பெண் தெய்வங்களை வைத்திருந்தது ஒரு நாட்டின் சிறப்பில் பெண்களின் கடமை எவ்வளவு தங்கியுள்ளதென்பது கூறாமலே விளங்கும்.

ஆனால் நாட்டின் நவநாகரீக வளர்ச்சியில் பெண்களின் கடமை தங்கியுள்ளதென்பதல்ல. தன் சமூகத்தில் ஒற்றுமை, அன்பு, இறைவன் வழிபாடு முதலியவற்றிற்காக ஆற்றவேண்டிய கடமைகள் எங்ஙனம் தங்கியுள்ளதென்பதேயாகும். பெண்களின் வாழ்க்கை நிலை காலநிலைக்கேற்ப மாறுபடுவனவாக இருப்பினும் அவர்கள் செய்யவேண்டிய கடமைகள், தொண்டுகள் பல உண்டு. அவற்றை எல்லாப் பெண்மணிகளும் தவறின்றிச் செய்தல் நாட்டின் வளர்ச்சிக்கும் தன் சமூக வளர்ச்சிக்கும் இன்றியமையாததாகும்.

பெண்கள் அன்னை, இல்லாள், சகோதரி, மகள் ஆகிய நான்கு நிலைகளிலும் இக் கடமைகளைச் செய்யவேண்டியவர்களாயிருக்கிறார்கள்.

உலகில் மக்களுக்கு உண்டாகும் பயன்களிற் பெரும்பாலன அன்னையராலேயே உண்டாகவேண்டும். மக்களுக்கு வேண்டிய பயன்களை அருளும் சக்தி அன்னையிலேயே உண்டு. வருங்கால மக்களின் வாழ்க்கை அன்னையரிலேயே தங்கியுள்ளது. பல மக்களைப் பெற்று அவர்களுக்கு ஊண் உடை அளித்து வளர்த்து விடுவதில் மாத்திரம் அன்னையரின் கடமைதங்கியுள்ளதல்ல. நாட்டில் ஒவ்வோர் அன்னையரும் ஒவ்வோர் மக்களையும் நாட்டின் நன்மக்களாக்க முயலுதல் வேண்டும். கல்வி, செல்வம், நாகரீகம் இவற்றால் மாத்திரம் நன்மக்களாக்கி நாட்டின் முன்னேற்றத்தை

வளர்ப்பதல்ல, சகல சீவ பிராணிகளிலும் அன்பு, சமூகத்தில் ஒற்றுமை, இறைவனின் வழிபாடு முதலியவற்றிலும் நன்மக்களாக்குதல் வேண்டும்.

அன்னையின் அன்பே அருட்சக்தியை உண்டாக்குகின்றது.

“தாயிற்சிறந்த தயாவான தத்துவனே”

என மணிவாசகர் கூறுகின்றார், இதனால் அன்னையரின் குணங்களில் உத்தமமானது “தயை” என்பது பெறப்படுகின்றது. இறைவனின் அருளைத் தாயாக வைத்து வணங்கப்படுகின்றது. உண்மை அன்பினால் அனைவருள்ளத்தையும் கவர்ந்து பல நன்மைகளை அருளக் கூடியவள் அன்னையே. அன்னையின் வட்டிற் சோற்றிலும் தொட்டிற் பாட்டிலும் தூய அன்பும், வீரமும், தொண்டும் பிரதிபலிக்கவேண்டும். பாலூட்டும்போது பிள்ளையின் ஆக்கம் கருதி ஊட்டவேண்டும். அன்பு நீர் அன்னையின் உள்ளத்திலிருந்தே குழந்தைகளின் உள்ளத்திலும் ஊறவேண்டும். உலகிலுள்ள சகல சீவப்பிராணிகளிலும் அன்பு வெள்ளத்தைப் பொழிந்து; அவையாவும் இறைவனின் அன்பிற்குரியவை என்பதை உணர்ந்து, அன்பின் பாதையில் அன்னை நடந்து செல்லச் செய்யும் நடந்து செல்லும்.

“தாய் போற் சேய்” என்பது ஆன்றோர் வாக்கல்லவா? ஆதலால் தம்மக்களின் இதயத்தில் செயலில் அன்புச் சக்தியை உண்டாக்கவேண்டுமாயின் அன்னையும் அன்னைவழியில் செல்லவேண்டும். ஒவ்வோர் அன்னையும் தம்மக்களைமாத்திரம் எனது மக்களென்னும் கொள்கையை விடவேண்டும். தன் சமூகத்திலுள்ள ஒவ்வோர் குழந்தையும் ஒரே இறைவனின் குழந்தைகளாதலால் தம் குழந்தைகளாகவே கருதப்படவேண்டும். தம் சமூகத்திலுள்ள குழந்தைகள் பலவறுமைப்பிணியால் உண்ண உணவின்றி வாட்டமுறுவதைக் கண்டும், தம் குழந்தைகள் மாத்திரம் நேரத்திற்கு நேரம் விதம் விதமாக, மிதமாக உண்டு வளருதல் போதுமென்ற எண்ணம் அன்னையின் உள்ளத்தில் இருப்பின் அகற்றப்படவேண்டும். அக்குழந்தைகள்மீதும் கருணைகாட்டவேண்டும். அன்பு செலுத்தவேண்டும். அன்பு செலுத்திவர குழந்தைகளும் தம் சமூகத்திலுள்ள மற்றைய குழந்தைகளோடுபேதமின்றி அன்புடன் வளர்ந்து வருவர். தன் சூழலிலுள்ள ஒவ்வோர் குழந்தையையும் தம் குழந்தைகளாகக் கருதி அன்பு செலுத்திவர இவ்வன்னையர் குழந்தைகள் தாமே வளரும்.

ஒவ்வோர் அன்னையும் மக்களை ஒற்றுமையுடையவர்களாயிருக்கச் செய்யவேண்டும். குடும்பத்திலும், சமூகத்திலும் அன்னை ஒற்றுமையுடையவளாயிருக்கவேண்டும். தன் சமூகத்திலுள்ளாவர்களில் பொறாமை, கோபம், தயவின்மை, வீண்சண்டை, முதலிய துர்க்குணங்களின்றி யாவருடனும் ஒற்றுமையாய் வாழ்ந்துவருதல் வேண்டும். தன் சமூகத்திலுள்ள ஒவ்வோர் அன்னையருடனும் ஒற்றுமையுடையவளாயிருக்கவேண்டும். அன்னையர் எவ்விதம் ஒற்றுமையாய், அமைதியாய், அன்பின் பாதையில் நடந்து செல்ல குழந்தைகளும் தம் சகோதாருடனும் தம் சூழலிலுள்ள ஏனைய குழந்தைகளுடனும் ஒற்றுமையாய் வாழ்ந்து வருவர்.

"அன்னையும் பிதாவும் முன்னறி தெய்வம்"

என்பது ஒளவைப்பிராட்டி வாக்கு. அன்னையே முதற்தெய்வம். முதற் தெய்வமாகிய அன்னையே இறைவனைப்பற்றிய உண்மையையும் சேய்க்கு உணர்த்தவேண்டும். சேய்க்கு உணர்த்துவதெங்ஙனம்? இறைவனைத் தான் வழிபடுதலைக்கண்டு நாளடைவில் சேயும் வழிபடுவான் எனநினைந்து இறைவன்மீது அன்பு செலுத்தவேண்டும். இறைவனின் திருவிளையாடல்களைப் பற்றிய சிறு கதைகளைக் கூறி அவற்றின் மூலம் இறைவன் கருணையை உணர்த்துதல் வேண்டும். ஓய்வு நேரங்களில் வீண்வார்த்தைகள் பேசி, தவப்பொழுதை அவப்பொழுதாக்காமல் இயன்றவரை ஒவ்வோர் அன்னையும் தம் மனதை இறைவன்பாற் செலுத்தி இறைவனைப் பிரார்த்தனை செய்துவரவேண்டும். அன்னை இவ்விதம் நடந்துவர மக்களும் அவ்வழியில் நடந்து செல்வர். இறைவன் அருளைப் பெறுவர்.

தாய்மார்களே! இனிவரும் நாட்டின் வீரர்கள், நாட்டின் நன்மக்கள், நன்மகான்கள் உங்கள் உள்ளப் பண்பின் ஒளிக்கதிர்களே! நீங்கள் பொருளற்றவெறும் நாகரீகக் கோலங்களைக் கண்டு மயங்காதீர்கள். அன்பு உலகம் உங்களை வரவேற்கின்றது. உங்கள் குழந்தைகளை அழைக்கின்றது. ஆதலின் இறைவன் எங்குமுளன்; சகல சீவபிராணிகளுக்கும் ஒரே இறைவனின் அன்புக் குழந்தைகள்; "அன்பே சிவம்" என்னும் உண்மைகளை உங்கள் அன்புக் குழந்தைகளுக்கு அருளுங்கள்.

# கடவுள் அன்பு.

[பொன்னேரி ப. சிவலிங்க நாயனார்]

கடவுள் நம்பிக்கை தீவிரமாக ஒருவரிடத்துண்டாயின், அதன் காரணமாக அன்னவருக்குக் கடவுளைக்காணவேண்டிய ஆர்வம் ஏற்படும். அவ்வார்வமிகுந்தெழுந்து உரங்கொள்ளுவதால், கடவுளையடைவதற்கு வேண்டிய "அன்பு" என்ற அரும் பெரும் உணர்ச்சி, அருளுக்கு முதலாகி உள்ளத்தினின்றெழுந்து மலர்ந்து மிளிரும். இஃது ஒருவன் பொறிவாயிலைந்தினையுமவித்து, அவற்றை நீறாக்கி, நான் எனதெனும் பாசக்கயிற்றினைத் துண்டு துண்டாகத் துணித்தெறிந்து, இருள்சேர் இருவினையுஞ் சேராத கடவுளையடையக் கடவுளிடம் காட்டப்படுவதால் "கடவுள் அன்பு" எனப் பெயர் பெறும்.

கடவுள் பிரதிபலன் கருதாது உயிர்களிடத்துக் காட்டப்படும் அன்பு அருள் எனப்படும். இவ்வருளைப் பெற்றுக் கடவுளின் கருணைக்குப் பாத்திரமானது தான் மக்கள் முயன்றடையவேண்டிய அரும்பெரும் பொருள். உலக இன்பத்திற்குப் பொருள், காரணமாவதுபோல கடவுளின்பத்திற்குக் காரணம் அருளேயாம். இத்தகைய கடவுளருளைப் பெற்றவரெவரும், பெரும்பிறவிப் பௌவத் தெய்வத்தடந் திரையால் எற்றுண்டு, பற்றொன்றின்றிக் கனிமைநேர் துவர்வாயா ரென்னுங் காலாற் கலக்குண்டு, காமவன் சுறவின்வாய்ப் பட்டுழலாது, எவ்விதப் பழிபாவங்களினின்றும் நீங்கிக் கடவுளோடொன்றி இன்புற்று மகிழ்வர். ஆகலின் நாம் கடவுளருளைப்பெற்று, அவரையறிந்தடையவேண்டுமாயின் கடவுளிடம் உண்மையன்புடையவராதல் வேண்டும். உண்மை அன்பு என்பது, கடவுளின் பேரறிவையும், பெருநிலையையும் அவர், சம்சாரமென்னும் சாகரத்தைக் கடக்குந்தோணியாக இம் மானிட சரீரத்தை நமக்குக் கொடுத்து, அறிவு நிலைபெறச்செய்யும் பெருங்கருணைத் திறத்தையும், நினைந்துணர்ந்து, அன்பே நிறைந்து நிறைந்து கண்ணீர் ஊற்றெழப் பொங்கி வழிந்து உடல் நனைந்துபோக, அருள் அமுதே! நல்நிதியே! ஞானநடத்தரசே! என்உரிமை நாயகனே! என்று போற்றித் துதித்தலாகும். இங்ஙனம் அன்பால் அழுதரற்றுவதால், அன்பேயன்பாக அறிவழியும் ஆண்டவனையடையமுடியுமேயன்றி, பிற எச்சாதனங்களானும் கடவுளையடையமுடியாது என்பதை,

"அன்போ டுருகியகங் குழைந்தார்க் கன்று
என்போன் மணியினை எய்த வொண்ணுதே"

என்ற திருமந்திரமும்

"கருமமா தவஞ்செபஞ் சொல் காசறு சமாதி ஞானம்
புரிபவர்வசமதாகிப்பொருந்திடேம்புரைபொன்றின்றித்
திரிவறு மன்புசெய்வோர் வசமதாய்ச் சேர்ந்துநிற்போம்
உரைசெய்வோ மவர் முன்னெய்தி, யவருள்ளத் துறைவோம்

என்ற வாயுசங்கிதையும்,

"புன்புலவழியடைத்து அரக்கி லச்சினை செய்து
நன்புல வழிதிறந்து ஞானநற் சுடற்கொளிஇ
என்பிலெள்கி நெஞ்சுருகி உள்கனிந்து எழுந்ததோர்
அன்பிலன்றி யாழியானை யாவர் காண வல்லரே"

என்றபேயாழ்வர் செய்யுளும்

நன்கு விளக்குவதால் உணரப்படும்.

கடவுளன்பையுடையோர்களான தவஞானிகள்பலர் நம் நாட்டில் உளவாயினர். இன்றைக்கும் சிலர் உளர். இவர்கள் உலக இன்பகரமான வாழ்க்கையைத் துறந்தார்கள். சுற்றத்தை நீத்தாகள். யௌவனத்தை மறந்தார்கள். இவர்களுக்கு, அரசனொரு பொருட்டல்ல, அவனி யொரு பொருட்டல்ல முரசதிர்மாடஞ்சூழ்மாநகருமொரு பொருட்டல்லகடவுளைக்காண வேண்டுமென்ற பேரார்வத்தால், ஓடிவிழுந்து உகந்தாலித்துப் பாடியாடிக் கடவுளைக் கூவியழைத்தலே இவர்தம்வேலை. கல்வி செல்வம் புகழ், யாதொன்றையும் வேண்டாது, கடவுளின்குரைகழல் ஒன்றையே, கன்றைப்பிரிந்த காராவைப்போன்று, கசிந்துருகி வேண்டுகின்றார் நம்மணிவாசகனார்! இவர் தம் உள்ள நிலையின் உண்மையன்பை

'உற்றாரையான்வேண்டேன், ஊர்வேண்டேன், பேர்வேண்டேன்
கற்றாரையான்வேண்டேன், கற்பனவும் இனியமையுங்
குற்றாலத் தமர்ந்துறையுங் கூத்தாவுன் குரைகழற்கே
கற்றாவின் மனம்போலக் கசிந்துருக வேண்டுவனே"

என்று எவ்வளவு தெளிவுபட விளக்கியுள்ளனர்! இன்னும் ராமலிங்கசுவாமிகள், பட்டினத்தடிகள், தாயுமானவர், தேவாரச் செல்வர்கள், ஆழ்வாராதிகள் முதலிய பலர்களும் காதலாகிச்

கண்ணீர்மல்கிக் கசிந்துருகும் பேரன்பினாலேயே, கடவுளைக்கண்டு தெளிந்து மகிழ்ந்தார்கள். இவர்கள் கடவுளன்பில் ஈடுபட்டுச் செய்த முயற்சிகள் வீணானது என்று, யாரால் சொல்லமுடியும்?

இத்தகைய பெரியோர்கள் பலரும், எத்துணையும் பேதமுறாது, எவ்வுயிரும் தம்முயிர்போல் எண்ணி, உளம் ஒத்து, அன்புளங்கொண்டு ஒழுகினர். "எவ்வுயிரும் பராபரன் சந்நிதியதாகும். இலங்குமுயிர் உடலனைத்தும் ஈசன் கோயில்" என்றபடி உயிர்களெல்லாம் கடவுளுக்குத் திருமேனிகள், அவ்வுயிர்களுக்கு நிலைக்களமாகிய உடம்பே, இறைவன் வாழும் ஆலயங்களாதலால், கடவுளன்பையுடையவர்கள் பிற உயிர்களிடத்தும் மெய்யன்புடையோராயிருக்கவேண்டுமன்றோ? உயிர்களிடத்தன்பில்லாது ஆண்டவனிடம் அன்புடையோராயிருப்பதிற் காரியமொன்றுமில்லையாகவே, நம்தவஞான வள்ளல்களும், பிற உயிர்களைக் களங்கமற்ற கட்டற்ற பேரன்புடன் நேசிக்கும் ஜீவகாருண்ணியப் பெருநிலையிற் றிகழ்ந்து விளங்கினர். இதனால் அவர்கள் திருவுள்ளமும் சித்துருவான கடவுள் நடம்புரியும் இடமாக விளங்கிற்று. ஆகவே நாமும் பிற உயிர்களிடம் அன்புகாட்டி நடத்தலே, கடவுளிடம் காட்டும் உண்மையன்பாகும்.

தன்னுயிர்போல் மன்னுயிரை எண்ணி, அவைகளிடம் அன்புபூண்டொழுகுவார்க்கு, கடவுளன்பு நாளடைவில் உதிக்கும். இவ்வன்பு யாவர்க்கும் எளிதிலுண்டாவதன்று. ஒருவர் பலபிறவிகளிற் செய்த நல்வினைக்கீடாகி, ஜீவகாருண்ய முதிர்ச்சியால் ஏற்படுவதாகும். இது இடையறாது அகத்தினிடத்தே முறுகிவளரின் சிவமாகும் (கடவுளாகும்) தன்மையது. அன்பினது முதிர்ச்சியால் சிவமும் அன்பும் இரண்டற அபேதமாய்க் கலந்துநிற்குமென்பதை,

"அன்புஞ் சிவமு மிரண்டென்ப ரறிவிலார்
அன்பே சிவமாவ தாரு மறிகிலார்
அன்பே சிவமாவ தாரு மறிந்தபின்
அன்பே சிவமாய மர்ந் திருப்பாரே"

என்ற திருமந்திரச் செய்யுளால் நன்குணரலாம்.

இவ்வகையான, முறுகிவளர்ந்த, அன்புளங்கொண்ட ஸ்ரீ ராமகிருஷ்ணபரமஹம்சர், அன்னையின் தியானத்திலாழ்ந்து கிடப்

# செய்தித் திரட்டு.

## சுந்தரமூர்த்திசுவாமிகள் குருபூசை விழா.

ஷெவிழா 23–7–50 ஞாயிறு தெல்லிப்பழை பாலர் ஞானோதய சபையில் கொண்டாடப்பெற்றது. அத்தருணம் அநேக மாணவ மாணவிகளும் திருவாளர்கள் செ. சின்னத்துரை, எஸ். சிதம்பரப்பிள்ளை ஆகியோரும் சொற்பொழிவாற்றினர்.

நாவலப்பிட்டி இந்துவாலிபசங்க ஆதரவில் 22–7–50 சனிக்கிழமை ஷெவிழா கொண்டாடப்பட்டது. அத்தருணம் திரு. வே. சங்கரப்பிள்ளை ஆசிரியர் சொற்பொழிவாற்றினர்: ஸ்ரீமதி சு. செல்வரத்தினம் ஆசிரியை அவர்கள் இசைவிருந்தளித்தனர்.

குருநாக்கல் சைவமகாசபை ஆதரவில் 23–7–50 ஞாயிறு ஷெவிழா கொண்டாடப்பட்டது, திரு. தா. மா. தாமோதரம்பிள்ளை அவர்கள் முக்கிய பேச்சாளராக இருந்தனர்.

அட்டன் இந்துமகாசபையில் 21–7–50 வெள்ளி திரு. வே. சங்கரப்பிள்ளை அவர்களால் "ஆலங்காட்டு நடனங் கண்டானந்தி'பார்" என்பது பற்றிப் பேசப்பட்டது.

குருநாக்கல் சைவமகாசபையில் 6–8–50 ஞாயிறு பண்டிதர் ம. வே திருஞானசம்பந்தன் அவர்கள் 'தெய்வத்தமிழ்' என்பது பற்றிப் பேசினார்கள்.

---

முற்பக்கத்தொடர்ச்சி.

பார். அன்னையை (காளியை)க் காணவேண்டுமென்று, அரும் பொன்னே! மணியே! என் அன்பே! என் அன்பான அறிவே! ஆனந்த வெள்ளமே! என்று ஆடிப்பாடி அகங்குழைந்தழுவார்! அன்னை அருள்பாலிக்கவில்லையே என மனங்குழைவார்! இவர் கண்களிலின்றும் பொங்கியெழுந்த நீரால், அரையில் கட்டிய ஆடைகள் முழுதும் நனைந்துவிடும்! என்னே, இவரின் அன்பு நிலை! இத்தகைய ஆர்வமும், அன்பும் கடவுளிடத்தேற்பட்டு முற்றினல், கடவுளின் பிரிவு தாங்கமுடியாததாகும் இப்பிரிவு எத்தகைய வருத்தங்களுக்குட்படுத்தும்? என்பதை அடுத்துவரும் கட்டுரையில் ஆராய்வோம்.

நீர்கொழும்பு இந்துவாலிபசங்க அங்கத்தினர் விழாவில் 5-8-50 சனி, திருவாளர்கள் எம். எஸ். திருவிளங்கம், கே. வி. சுந்தரம், வி. கே. பி. நாதன் ஆகியோர் பேசினர்.

சாது ஸ்ரீ முருகதாஸர்

3-8-50 வியாழன் கொற்மலை உனுகலோயா மாரியம்மன் கோயிலில் பஜனையுடன் 'தெய்வநம்பிக்கை' என்பதுபற்றி பேசினார்கள்.

4-8-50 வெள்ளி, ஹட்டன் ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமி கோயிலில் பஜனையுடன் கூட்டுப்பிரார்த்தனையும் பஜனையும் என்பதுபற்றிப் பேசினார்.

5-8-50 சனி, நாவலப்பிட்டி இந்துவாலிபசங்கத்தில் பஜனையுடன் 'அருள் வேண்டல்' என்பதுபற்றிப் பேசினார்கள்.

கூட்டுவழிபாடு.

வெள்ளவத்தை ஸ்ரீ மாணிக்கவிநாயகர் ஆலயத்தில் 8-8-50 செவ்வாய், ரேடியோ அஞ்சல் நிகழ்ந்தது

கொழும்பு ஜிந்துப்பிட்டி ஸ்ரீ சிவசுப்பிரமணிய சுவாமிகோயிலில் 3-7-50 ஞாயிறு ரேடியோ அஞ்சல் நிகழ்ந்தது.

கொம்பனித்தெரு ஸ்ரீ சிவசுப்பிரமணியசுவாமிகோயிலில் 18-8-50 வெள்ளி ரேடியோ அஞ்சல் நடைபெறும்.

சத்தியாக்கிரகம் நந்தாவில் அம்மன்கோயில் தர்மகர்த்தாக்களும் திருவிழாச்செய்யும் அன்பர்களும் ௸டி கோயிலில் சதுர்க் கச்சேரி வைப்பதில்லை என்று உறுதிவாக்குக் கொடுத்திருந்தும் பின் அவ்வுறுதிவாக்குவீசப்பட்டபடியினால் அதற்குப்பிராயச்சித்தமாகவும் இனிமேல் அதை முற்றாக ஒழிப்பதற்காகவும் அன்பர் பொ. கந்தையா ஆசிரியர் செப்ரெம்பர்மாசம் 15-ந்திகதி வெள்ளிக்கிழமை தொடக்கம் ௸டி கோயில் வீதியில் ஐந்து நாட்களுக்கு உண்ணாவிரதமிருந்தும் மௌனவிரதமிருந்தும் சத்தியாக்கிரகம் செய்யத் தீர்மானித்துள்ளார்கள்.

# விபுலாநந்த அடிகளார்

## வாழ்த்து

இளங்குழவிஇடைப்பயிலும்இயல்பினிவன்இடைப்பயிற்சிஎன்றுநிற்கும்
களங்கமிலாஉளம்படைத்துச்சாந்தியுலகினுக்குதவும்காட்சிசான்றோன்
துளங்குமனஅறம்பூணுதலினுக்கேகொண்டுசெயுந்தூயஞானி
விளங்குவிபுலாநந்தஅடிகளெனும்பெரும்பெயரோன்வென்றுவாழி.

சீராமகிருட்டினனார்ஞானநடைபணியாகுஞ்சிறப்புக்கொண்டோன்
பாரதிபுவனமெலாம்பரம்பொருளாய்ப்பார்த்துவக்கும்பண்புகண்டோன்
பேராரும்பாவலன்நாவலன்முத்தமிழ்க்கோர்பெருமைதந்தோன்
நேராரும்இலாவிபுலாநந்தனெனும்ஒண்தவத்துவிமலன்வாழி.

எழ்மொழியும்இசைஇயம்புஞ்செகசிற்பினனும்புலவர்எந்தல்சந்த
வாழ்வினைகப்பொருள்தொனிக்கமருவுபலநாடகநூல்வரம்புகண்டு
தாழ்வகலஇலக்கணநூல்தமிழ்மகளுக்கணிந்தமுதுகாணுங்கண்டோன்
சூழ்பிறவித்தளையறுத்தகுணவிபுலாநந்தத்தோன்நல்வாழி.

நன்இருளில்மட்டுநகர்க்கடலகத்துநீர்மகளிர்நயந்துவந்து
தெள்ளுதமிழ்இசைபயிற்றக்குறுமுனிபோல்தானுண்டறிந்தினிலே
உள்ளமும்காண்பரிதாய்க்காக்கொழிந்தமற்றநகைஉலகிற்கீந்த
வள்ளல்விபுலாநந்தஅடிகளெனும்குருநாதன்வாழிமாதோ.

வாணனைமாதுடலைப்பெரும்பொருளைவருமுயிரைமகிழ்ந்தர்ப்பித்துக்
கோணமைல்தமிழ்மகளைநனிவகுத்தின்கொளுவிருத்திக்குளிர்த்துகாண்போன்
பூணுகனோன்பில்லோன்பொறுக்காதபொறையில்லோன்புலத்திற்கப்பாற்
காணுதகாட்சியில்லோனெனும்விபுலாநந்தவேள்சகின்றுவாழி.

திரு. க. சு. நவநீத கிருஷ்ண பாரதியார் அவர்கள்,

மாவை — 23-7-50.

Registered at the G. P O. as a News Paper.

# யோகி ஸ்ரீ சுத்தானந்த பாரதியாரின் அரிய புதிய நூல்கள்.

| | | |
|---|---|---|
| 1 | திருக்குறளின்பம் | 3— 8 |
| 2 | அருட்செல்வம் | 2— 0 |
| 3 | யோகசித்தி (மூலமும் உரையும்) | 3— 0 |
| 4 | கலைக்கோயில் | 7— 8 |
| 5 | திருநூல் | 1—12 |
| 6 | ஏழை படும் பாடு | 5— 0 |
| 7 | இதுதான் உலகம் | 8— 0 |
| 8 | நாகரீகப் பண்ணை | 2— 0 |
| 9 | பெரியவாள் கதை | 1— 8 |
| 10 | சிவானந்த ஜோதி | 1— 0 |
| 11 | ஸ்ரீ அரவிந்தப் பிரகாசம் | 2— 8 |
| 12 | சுத்தானந்தம் | 2— 8 |
| 13 | ஆனந்தரங்கப்பிள்ளை | 0 – 8 |
| 14 | வானரசு | 0— 9 |
| 15 | இவளும் அவளும் | 0—10 |
| 16 | கீர்த்தனாஞ்ஜலி | 3 — 8 |
| 17 | நவரஸ நடனாஞ்ஜலி | 2— 0 |
| 18 | கவிக்கனவுகள் | 1— 8 |
| 19 | புதுயுகப் பாட்டு | 1— 8 |
| 20 | பாப்பா பாட்டு | 0— 8 |
| 21 | அர்ச்சனை மாலை | 0— 6 |
| 22 | தேசிய கீதம் | 1— 8 |
| 23 | மாணிக்கப்பாட்டு | 3— 8 |
| 24 | சாதன கீதம் | 2— 0 |
| 25 | இளிச்சவாயன் | .... .... |

வியாபாரிகளுக்கு ரூபா **50** க்குள் கமிஷன் **20** சதம். அதற்குமேல் **25** சதம். பாக்கிங் தபாற்செலவு தனி.

**சுத்தானந்த நிலையம்,**
புதுக்கோட்டை.

கௌரவ ஆசிரியர்: க. இராமச்சந்திரன். பதிப்பாசிரியர்: நா. முத்தையா,
'ஆத்ம ஜோதி' நிலையம், நாவலப்பிட்டி (சிலோன்)
நாவலப்பிட்டி, சரவண பிரஸில் பதிப்பித்தது 17-8-1950